398

27

DETAILED NOTES

ON

THE MODERN

# Tamil Sixth Reader

# புதுமுறைத் தமிழ்

# ஆறும் பாடக் குறிப்பு

PUBLISHED BY

…AKSHI BOOK DEPOT

… Thiruvilandur, Mayavaram.

1934 . [விலை அணா-4

TB
031(6) N33
224185

DETAILED NOTES

ON

THE MODERN

# Tamil Sixth Reader

# புதுமுறைத் தமிழ்

# ஆறும் பாடக் குறிப்பு

PUBLISHED BY

KAMAKSHI BOOK DEPOT

G. T. MADRAS.

---

ரிஜிஸ்தர் செய்தது] 1933 [விலை 4 அணா

PRINTED BY THOMPSON & CO., LTD.
33, BROADWAY, MADRAS.

புதுமுறைத் தமிழ்

# ஆரம்பாடக் குறிப்பு

---

## அரச வாழ்த்து

(1) சீர்—சிறப்பு, ஓங்கு—மிகுந்துள்ள, செங்கதிரோன்—சிவந்த கிரணங்களையுடைய சூரியன், செல்லும் இடம் எல்லாம்—செல்கின்ற இடங்களிலெல்லாம் (பூமியில் சூரிய ஒளி பரவும் இடங்களெங்கும்), ஏர் ஓங்கு—அழகு மிகுந்த, செங்கோல்—தனது செங்கோலின் ஆட்சி, இனிது உடையான்—இன்பமாகப் பொருந்தியிருத்தலை யுடையவர், பேர் ஓங்கு—பெருமை மிகுந்த, சீராஜராஜ சிகாமணி—சிறப்புற்ற அரசரும், அரசர்கள் முடியில் பூஷணமாகக் கொள்ளும் பெருமை யுடையவருமான, நம்—நமது, ஜார்ஜென்னும்—ஜார்ஜ் என்னும் பெயரையுடைய, மாராஜன்—மகாராஜன், மகிழ்ந்து—சந்தோஷமாக, வாழி!—வாழ்வாராக!

செங்கதிர் (செம்மை + கதிர்) சூரியன், வெண்கதிர் அல்லது தண் கதிர் என்பன சந்திரனைக் குறிக்கும். செங்கோல் (செம்மை + கோல்) எதிர்ப்பதம் கொடுங்கோல், சிகாமணி—சிகையில் அணியும் இரத்னத்தாலாகிய ஓர் ஆபரணம், சிகை—தலைமயிர், குடுமி, மா—பெரிய அல்லது மாட்சிமை பொருந்திய, வாழி—வியங்கோள்வினை, செங்கதிர் செங்கோல் இவை பண்புத் தொகைகள்.

2. பொங்கு—பொங்கி எழுகின்ற, கடல் மீது—கடல்களின் மீது, பொருவு இல்—ஒப்புமை இல்லாத, கலம்—கப்பல்களை, செலுத்தி—செல்லச் செய்து, எங்கும்—உலகில் எங்கும், புகழ்பெற்ற—கீர்த்தியைப் பெற்ற, எம்—இறைவன்—எங்கள் அரசரான ஜார்ஜ் என்பவர், தங்கம் மிகு—பரிசுத்தம் மிகுந்த, சிங்கக் கொடிக்கீழ்—அவரது சிங்கக்கொடி யுடன் கூடிய ஆட்சியின் கீழ், செகதலம்—உலகம், வாழ—நல்வாழ்வை அடைய, மங்களம் நாம் பாடுவாம்—நாம் மங்களவாழ்த்துப் பாடுவோம்.

பொங்குகடல் — வினைத்தொகை, பொருவு + இல் — பொருவில் கலம்—(கல் + அம்) தொழிற் பெயர், சகம்—செகம்—போலி.

3. வாழி வளநாடு—வளம் பொருந்திய நம் ஜார்ஜ் மன்னருடைய நாடுகள், வாழ்வனவாக! வளர் அறங்கள்—அவரது ஆட்சியால் வளர்ந்து கொண்டிருக்கும் தருமங்கள், வாழி—வாழ்வனவாக. வாழி தமிழாம் மணிமகளும்—தமிழ் என்னும் அழகிய பெண்ணும் வாழ்வாளாக. மாராஜன் ஜார்ஜ் என்னும் மன்னன்—மகாராஜரான ஜார்ஜ் என்னும் அரசர், மகிதலத்தில்—பூமியில், சிரோங்க—சிறப்பு ஓங்க, என்றும் சிறந்து—என்றைக்கும் சிறப்புற்று, வாழி—வாழ்வாராக! ஆரோ—அசை, வளநாடு (வளமை + நாடு) பண்புத் தொகை, வளரறம்—வினைத்தொகை, அறம் [அற + அம்] தொழிற் பெயர்.

---

## 1. நீதி தவறாத மன்னன்

பேறு—பாக்கியம்; பேறு—பெறு என்னும் தொழிலடியாகப் பிறந்த தொழிற் பெயர்; வழிபடுதல்—தொண்டு செய்தல்; விடங்கன்—உளியால் செதுக்கப்படாத விக்ரஹம்; (டங்கம்—உளி) அதாவது தேவ திருமாணமான மூர்த்தி; கதிரவன்—சூரியன்; மாடவீதி—ஆலயம் அல்லது அரண்மனையை யடுத்துச் சூழ்ந்துள்ள வீதி; பரம்பரை—வம்சம்; ஆராய்ச்சிமணி—அபாயத்தை அறிவிக்க ஒலிக்கும் மணி; துணுக்குற்று—திடுக்குற்று; ஆ—பசு; பிராயச்சித்தம்—செய்த பாவத்தினின்றும் நீங்கச் செய்யும் சடங்கு; தேர்க்கால்—தேர்ச்சக்கரம்; அருமந்த—[அருமருந்து அன்ன என்றதின் சிதைவு. இது மரூஉ மொழி] அரிய தேவாமிருதம் போன்ற; காவலன்—காப்பதில் வல்லவன், அரசன்; பணி—கட்டளை; தனயன்—குமாரன்; மணிமுடி—இரத்தினக் கிரீடம்.

1. மனு நீதிச் சோழன் என்று பெயர் வந்த காரணமென்ன?
2. அரச குமாரனுக்கு வீதி விடங்கன் எனப் பெயரிட்டதேன்?
3. இளவரசன் சிறப்புடன் வளர்ந்து வந்தமைக்கு எதை உவமிக்கப் பெற்றுள்ளது. அதனை விளக்குக.
4. வீதி விடங்கனுக்கு ஏற்பட்ட பழியாது?
5. கன்று இறந்தமைகண்ட அரச குமாரன் என் செய்தனன்?
6. தாய்ப்பசு தன் துயரை எவ்வாறு தெரிவித்துக்கொண்டது?
7. பசுவின் துயரை அறிந்த மன்னவன் நிலைமையை விவரிக்க.
8. அரசனுக்கு அமைச்சர்கள் கூறிய சமாதானம் என்ன?
9. மன்னன் மந்திரிக்கிட்ட பணியாது? அம் மந்திரியின் செயலை விளக்குக.

10. பின் மனுவேந்தன் எவ்வாறு நீதிமுறை செய்தனன்?

அடியிற் கண்டவைகளில் ஒவ்வொன்றையும் தனித்தனி உங்கள்சொந்த வாக்கியங்களில் அமைக்க:— பரம்பரை, தீவினை, காணுவண்ணம், கடுஞ்சினங் கொண்டு, பூமாரி; திகைத்து நின்றான்.

---

## 2. வௌவால்

விசித்திரம்—அதிசயம்; படர—வியாபிக்க; முகடு—உச்சி; உதிரம்—இரத்தம்; துயில்-தூக்கம்; குருதி—இரத்தம்; கண்ணி-வலை.

1. வௌவாலின் உடல் அமைப்புகளை விளக்குக.
2. வௌவாலை ஏன் பறவை யினத்திற் சேர்க்கக்கூடாது?
3. வௌவால் எவ்வளவு வகைப்படும்? அவை யாவை?
4. பழந்தின்னி வௌவாலின் தன்மையையும் அதன் உபயோகத்தையும் தொகுத்துக் கூறுக.
5. வாம்பெயர் வௌவால் எங்குக் காணப்படுகின்றன. ஏன் அதனை இராக்ஷஸ வௌவால் என்று சொல்கின்றனர்?
6. வாம்பெயர் வௌவாலின் செய்கைகளை விளக்குக.
7. வாம்பெயர் வௌவாலின் உபயோகமென்ன?
8. வௌவாலைப் பற்றி உங்கள் சொந்த நடையில் 10 சிறு வாக்கியங்கள் எழுதுக.

---

## 3. கிச்சிலி அல்லது நார்த்தை

ஆரோக்கியம்—சௌக்கியம்; உரம்—எரு; கண்ணி—சிறுவாய்க்கால்; சராசரி – பொது; மதுரம்—இனிமை ; நறுமணம் – நல்லவாசனை; இனிப்பு—தித்திப்பு; தளிர்—கொழுந்து; வாலை—நீராவியை வடிகட்டிக் குளிர வைக்கும் ஓர் இயந்திரம்.

1. கிச்சிலி இனத்தைச் சேர்ந்த பழவகைகளைக் குறிப்பிடுக.
2. கிச்சிலியைப் பயிரிடுவது எவ்வாறு?
3. கிச்சிலிமரம் எப்பொழுது பழுக்கத் தொடங்கும்?
4. விதையில்லாக் கிச்சிலியின் வரலாற்றைக் கூறுக.

5. ஜப்பான் தேசத்துச் சிறு கிச்சிலியின் தன்மை யாவை?
6. கிச்சிலிமரத்தின் உபயோகங்களைத் தொகுத்துக் கூறுக.
7. நமது மாகாணத்தில் கிச்சிலி எங்குப் பயிரிடப்படுகின்றது?

---

## 4. நெருப்புப் பெட்டி

பஞ்சபூதம்—ஐந்து பூதங்கள்: நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் பஞ்ச பாண்டவர், பஞ்சலோகம் இவற்றை விளக்குக.

அரணிக் கட்டை—நெருப்புக் கடைந்து எடுக்கக்கூடிய கட்டை; சுழுந்து—சணல் செடியின் சுள்ளி; (Sefty Match)—ஸேப்டி மாச்—அபாயமில்லாத நெருப்புப் பெட்டி; பாஸ்பரஸ்-திமிர்பாஷாணம் (Phosphorus); ஊதியம்—இலாபம்; இரசாயனப்பொருள்—(Chemical substance.)

1. பஞ்ச பூதங்கள் யாவை?
2. பண்டைக் காலத்தில் மனிதர்கள் நெருப்பை எவ்வாறு உண்டாக்கிக் கொண்டனர்?
3. தற்காலமுள்ள நெருப்புப்பெட்டி எப்படிச் செய்யப்படுகிறது?
4. அபாய மில்லாத நெருப்புப் பெட்டி (Safty Match) எவ்வாறு செய்யப்படுகிறது? அதனால் உள்ள நன்மை யாது?
5. நமது தேசத்தில் நாம் விருத்தி செய்ய வேண்டிய மற்றும் சில கைத் தொழில்களைக் குறிப்பிடுக.

---

## 5. தஞ்சைப் பெருங் கோயில்

விமானம்—தேவாலயத்தின் ஒரு பகுதி; ஸ்தூபியுடன் விளங்கும் உன்னத மண்டபம்; உன்னதம்—உயர்வு; நிருமாணம்—அமைப்பு; சிற்பி—அரியக் கட்டிடம் உருவம் முதலியன அமைப்போன்; தக்ஷிணமேரு—தெற்கேயுள்ள மேரு வென்னும் மலை. பொறிக்கப் பெற்றவை—செதுக்கப் பெற்றவை; சோணாடு—சோழ நாடு; (மரூஉ மொழி) ஆவணம்—கடை வீதி; போர்ப்படைத்தானம்—படை வீரர்கள் தங்கியிருக்குமிடம்; நடுநாயகம்—இடையேவிளங்கும் தலைமையான பொருள்; மானியம்—வெகுமதியாக அளிக்கப் பெறும் நிலம்; விருது—கொடி; சாஸனம்—உறுதிப் பத்திரம்.

1. தஞ்சைப் பெருங்கோயிலைக் கட்டிய மன்னன் யார்? அவன் எப்பொழுது வாழ்ந்து வந்தவன்?
2. தஞ்சைப் பெருங்கோயிலின் சிறப்புக்களைத் தொகுத்துக் கூறுக.
3. அவ்வாலயத்திற்கு வழங்கும் பெயர் யாது? அப்பெயரின் காரணத்தைக் குறிப்பிடுக.
4. தஞ்சை நகரின் முற்கால அமைப்பை விளக்குக.
5. இப்பொழுது தஞ்சையில் உள்ள கோட்டை யாரால், எப்பொழுது கட்டப்பட்டது?
6. தஞ்சைக் கோயிலிலுள்ள கல் வெட்டுச் சாஸனங்களால் அறியப்படுவன யாவை?

இராஜராஜசோழன்:— இவன், தஞ்சாவூரைத் தனது இராஜதானியாகக் கொண்டு சோழநாட்டை ஆண்டுவந்தவன். இவன் கி. பி. 985–1012 வரையில் ஆட்சிபுரிந்து வந்தான். இவன் மஹாவீரன். இவன் கீழ்ப்பெரும் தரைப்படைகளும் கப்பற்படைகளும் இருந்தன. இவ்வேந்தன், சேர பாண்டி நாடுகளையும் மற்றும் பல வடநாடுகளையும் ஜயித்தான். கடலிடையே யுள்ள பல தீபாந்தரங்களும் இவனது ஆட்சிக்கு உட்பட்டு இருந்தது. இவ்வேந்தன்; சிவபக்தியிற் சிறந்தவன். இவனே, தேவாரங்களைத்தேடி, உலகுக்கு அளித்தவனாவன். இவனது அருஞ்செயல்கள் மற்றும் பலவாம்.

---

## 6. பொங்கற் புதுநாள்

புங்கவன்–உயர்ந்தவன்; புனிதன்–பரிசுத்தமானவன்; மலிந்திடும்–நிறையும்; செங்கதிர்–சூரியன்; வடவழி–வடக்குப் புறவழி (உத்தராயணம்) திகழ்ந்திடும்–விளங்கும்; மரு–வாசனை; கன்னல்–கரும்பு; கறவை–பால் கறக்கும் பசு, எருமை முதலியன; இன்னிசை–இனிய பாட்டு; கவின்–அழகு; இறை–இறைவன், கடவுள்; உற–பொருந்திய; சுற்றம்–பந்துக்கள், பொலிய–விளங்க; குன்று–குறையாத.

1. பொங்கற் பண்டிகை எப்பொழுது வரும்?
2. உத்தராயணம் என்பது என்ன?
3. வருஷத்தின் மற்றொரு பாதிக்கு என்ன பெயர்?
4. உத்தராயணத்தின் சிறப்புக்களை விளக்குக.
5. திருவிழாக்களிற் சில குறிப்பிடுக.

6. இன்னிசை யெழுப்பும் பறவைகளில் இரண்டு கூறுக.
7. இனிய கனி மரங்கள், மலர்கள், கதிர்கள் இவற்றில் தனித் தனியே மும்மூன்று கூறுக.
8. நீங்கள் பொங்கற் பண்டிகை கொண்டாடும் விதத்தை விளக்குக.

---

## 7. நமது உடைகள்.

ஆரோக்கியம்—சௌக்கியம்; நாகரிகம்—நகரவாழ்வு, மேலான வாழ்க்கை; ஆடம்பரம்—அலங்காரத் தோற்றம், பகட்டு; துருவப் பிரதேசம்—பூமியின் வடகோடி தென்கோடியிலுள்ள பாகங்கள்; போலி—வேஷம்; விதிர் விதிர்த்து—நடுநடுங்கி; அல்லல்—துன்பம்; நியமம்—ஒழுக்கம், சடங்கு; அறிகுறி—அடையாளம்; அபரிமிதம்—ஏராளம்.

1. நமது உடல், மேற் கொண்டுள்ள இரு தொழில்கள் யாவை?
2. உடைகள் பொதுவாக எவ்வளவு வகைப்படும்; அவை யாவை?
3. கம்பளியாடையின் தன்மை யாது.
4. பட்டு வஸ்திரங்களின் நிலைமையை விளக்குக.
5. பருத்தியாடையின் சிறப்புக்கள் யாவை?
6. நாம் உடை விஷயத்தில் கவனிக்க வேண்டியவை யாவை?
7. கறுப்புநிற ஆடைகளின் தன்மையை விளக்குக.
8. ஆடை விஷயத்தில் நமது வழக்கக் குறைவை விளக்குக.

அடியிற்கண்ட பதங்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியே ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக:— நியமம், போலி, சடங்கு, அபரிமிதம், அறிகுறி.

---

## 8. அசைந்தாடுங் கற்பாறை.

1. குடியரசு என்றால் என்ன?
2. அர்ஜண்டயின் நாடு எங்குள்ளது? அதன் இராஜதானி யாது?
3. அசைந்தாடுங் கற்பாறையின் பெயர் என்ன? அதன் நிறை எவ்வளவு?
4. டாண்டில் கற்பாறையின் அதிசயங்களை விளக்குக.

அடியிற் கண்டவற்றைத் தனித்தனியே உங்கள் சொந்த வாக்கியங்களில் அமைக்க:—

பல்லாயிரம், உன்னதமான, மனித சஞ்சாரமற்ற, ஆங்காங்கு.

---

## 9. கிரகங்கள் (முதற்பாகம்.)

தாரகை—நக்ஷத்திரம்; பிரதிபலிப்பது—ஒன்றின் உருவம் எதிரிலுள்ள பொருளில் விளங்குவது; சலனம்—அசைவு; ஞாயிறு—சூரியன்; ஆகர்ஷணசக்தி—தன்னிடம் இழுத்துக்கொள்ளும் தன்மை; சாயாக்கிரகம்—நிழல் வடிவமான கிரகம்; கோள்—கிரகம்; நள்ளிரவு—நடு இரவு; நிதானமாக—ஊன்றி, மெதுவாக; பூர்வீகம்—பழமை; பானு—சூரியன்; புவி—பூமி; தரணி—பூமி; ககோளம்—ஆகாயமண்டலம்; திங்கள்—சந்திரன். உபகிரகம்-ஒரு கிரகத்தைச் சுற்றிவரும் சிறுகிரகம்.

1. கிரகங்களுக்கும் நக்ஷத்திரங்களுக்கும் உள்ள வித்தியாசங்கள் யாவை?
2. நமது நாட்டுப் பூர்விக வானசாஸ்திரிகள் எவ்வெவற்றைக் கிரகங்கள் எனக் கொண்டுள்ளார்.
3. மேனாட்டார் கூறும் கிரகங்கள் யாவை?
4. இராகு கேதுக்களைப் பற்றி அறிந்துள்ளவைகளைக்குறிப்பிடுக.
5. புதன் என்ற கிரகங்களின் தன்மை யாது?
6. புதன் ஏன் பெரும்பாலும் தென்படுவதில்லை.
7. புதனுக்கும் சூரியனுக்கும் உள்ள தூரம் என்ன?
8. புதன் சூரியனை ஒருமுறை சுற்றிவர எவ்வளவு காலம் செல்லும்.
9. சுக்கிரன் எப்பொழுது எங்குக் காணப்படும்?
10. சுக்கிரனுக்கும் சூரியனுக்குமுள்ள தூரம் என்ன?
11. சுக்கிரன் சூரியனைச் சுற்றிவர எவ்வளவு நாட்கள் செல்லும்?
12. பூமிக்கும் சூரியனுக்குமுள்ள தூரம் என்ன?
13. இரவு பகல் எப்படி உண்டாகின்றது?
14. பூமி சூரியனைச் சுற்றிவர எவ்வளவு காலம் செல்லும்? அதற்கு என்ன பெயர்?
15. உபகிரகம் என்றால் என்ன?
16. சந்திரனைப் பற்றியறிந்துள்ளதைக் கூறுக.

---

## 10. இரும்பு

எஞ்சியுள்ள—மீதியாகவுள்ள; எண்ணிறந்த—எண்ண முடியாத; தளவாடம்—சாமான்; அயம்—இரும்பு; நீராவிக்கலன்—நீராவிக் கப்பல்; மூலிகை—பச்சிலை; புடம்—சுத்தம்.

1. இரும்பை உலோக அரசன் என்பதேன், மற்ற உலோகங்கள் யாவை?
2. இரும்பை எவ்வாறு பிரித்தெடுப்பது?
3. வார்ப்பிரும்பாவது யாது?
4. தேனிரும்பு என்றால் என்ன?
5. எஃகு என்பதின் தன்மைகளை விளக்குக.
6. வார்ப்பிரும்பு, தேனிரும்பு, எஃகு இவற்றாலாகிய சில பொருள்களைக் கூறுக.
7. இங்கிலந்தில் இரும்புத் தொழிற்சாலைகள் உள்ள இடங்களிற் சில கூறுக.
8. நமது நாட்டில் இரும்புத் தொழிற்சாலை எங்குள்ளது? அதற்கு உரியவர் யாவர்?
9. இரும்புத் திருவின் தன்மைகளை விளக்குக.
10. இரும்பினால் செய்யப்படும் மருந்துகள் யாவை?
11. இரும்பைப் பற்றிய பழமொழிகளில் சில கூறுக.
12. இரும்பைப்பற்றி 15 வரிகளுக்கு மேற்படாமல் ஒரு வியாஸம் எழுதுக.

---

## 11. காவிரிப்பூம் பட்டினம்

ஆன்றோர்—பெரியோர்; புராதன—பழைய; வாணியம்—வியாபாரம்; வடபால்—வடக்குபுறம்; பிணி—நோய்; ஆச்சிரமம்—தவமுனிவர் இருக்குமிடம்; இணை—இரண்டு; குண்டிகை—வாய்குறுகிய குடம்; புனல்—தண்ணீர்; பிரான்—பெருமான்; அன்னாய்—அன்னையே! பாவை—பெண்; குலக்கொடி—குலம் வளரக் காரணமாய் உள்ள ஒரு கொடி போன்ற பெண். ஊழி—யுக முடிவுக்காலம்; சிதைந்து—பின்னப்பட்டு, உடைந்து; அரும்பி—தோன்றி; மாலை மதியம்—மாலை நேரத்திற்றோன்றும் வளர்பிறைச் சந்திரன்; அரோ—அலைசர்சொல்; அகழ்—கோட்டை மதிலை யடுத்து வெளியேயுள்ள ஆழ்ந்த நீர் நிலை; அவனி—பூமி; வேலை—கடல்.

1. காவிரிப்பூம் பட்டினத்திற்குச் சம்பாபதி என்றபெயர் வந்த காரணம் என்ன?
2. காவிரிப்பூம் பட்டினம் எனப்பெயர் வந்த வரலாறு கூறுக.
3. ககந்தன், அகத்தியர், கவேர ராஜன் இவர்களைப் பற்றிய விவரங்களைக் கூறுக.
4. புகார் என்ற பெயரின் காரணங்களைக் கூறுக.

**‘காலை யரும்பி’** என்ற செய்யுள் :—

(பதவுரை) வேலை—கடலாகிற; அகழால்—அகழினால்; அமைந்த—பொருந்தியுள்ள; அவனிக்கு—பூமிக்கு; மாலை—மாலையைப் போன்று விளங்குகின்ற; புகழால்—புகழினால்; அலமந்த—அலமந்துள்ள; புகார்—புகார் என்னும் காவிரிப்பூம் பட்டினம்; காலை—காலை நேரத்தில்; அரும்பி—தோன்றி; மலரும்—விளங்கும், பிரகாசிக்கும்; கதிரவனும்—சூரியனும்; மாலை—சாயங்காலத்தில்; மதியமும் போல்—தோன்றும் வளர்பிறைச் சந்திரனையும் போல; வாழி—வாழ்வதாக; அரோ—அசைச் சொல். எழுவாய்; புகார்—பயனிலை—வாழி. காலைக் கதிரவன், மாலை மதியம் இவை புகார் நகருக்கு உவமிக்கப் பெற்றன.

---

## 12. புகழேந்திப் புலவர்

மரபு—வம்சம், குலம்; ஆஸ்தான வித்துவான்—ஸபையில் விளங்கும் புலவன்; புதல்வி—குமாரி; வளவன்—சோழன்; அழுக்காறு—பொறாமை; தாழ்—தாழ்ப்பாள்; சீற்றம்—கோபம்; இன்னல்—துன்பம்.

1. புகழேந்திப் புலவரது பிறப்பிடம் யாது?
2. புகழேந்திப் புலவர்பால் ஒட்டக்கூத்தர் பகைமை பாராட்டியதேன்?
3. புகழேந்திப் புலவர் சிறையினின்றும் விடுபட்டதெவ்வாறு?
4. அவர் நளவெண்பாப் பாடியது எப்பொழுது?
5. நளவெண்பா என்னும் நூலின் சிறப்புக்களைக் கூறுக.
6. நங்கைப் பாட்டுக்கள் என்பன யாவை? அவற்றின் வரலாறு கூறுக.
7. புகழேந்திப் புலவரின் காலம், மதம் இவற்றை விளக்குக.

---

## 13. சர்க்கரை

தாவரவர்க்கம்–மரவகை; மாசு–அழுக்கு; அபிவிருத்தி–வளர்ச்சி

1. சர்க்கரை தாவரங்களில் எவ்வாறு பொருந்தியுள்ளது?
2. கரும்பு ஆதியில் எங்கிருந்து உலகில் பரவிற்று?
3. தமிழ் நாட்டில் முதன் முதல் கரும்பைப் பயிரிட்டுப் பரவச் செய்தவர் யார்?
4. கரும்பு உலகிற் பரவிய விவரத்தைக் கூறுக.
5. பீட்ரூட் என்னும் கிழங்கு எங்கு விளைகின்றது? அதிலிருந்து சர்க்கரை எப்படிச் செய்யப்படுகிறது.
6. சர்க்கரை மரங்களிலிருந்து எவ்வாறு சர்க்கரை செய்கிறார்கள்?
7. நமது நாட்டில் கரும்பல்லாமல் மற்ற எவற்றினின்று சர்க்கரை செய்யப்படுகின்றது?
8. சர்க்கரையின் உபயோகங்களைத் தொகுத்துக் கூறுக.

---

## 14. பழமொழிகள்

அணு-கண்ணுக்குத் தெரியாத சிறு பொருள்; முதுமை–கிழத்தன்மை; மோழை–கொம்பில்லாத மாடு முதலியன.

அடியிற்கண்ட பழமொழிகள் ஒவ்வொன்றையும் தனித்தனியே உங்கள் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக :—

1. ஏழையைக் கண்டால் மோழையும் பாயும்.
2. ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூச் சர்க்கரை.
3. நரிக்குக் கொண்டாட்டம் நண்டுக்குத் திண்டாட்டம்.
4. நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்தது.
5. புலிக்குப் பிறந்தது பூனையாய்ப் போகுமா?
6. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.

---

## 15. ஜப்பானியர்

தீபகணம்–தீவுகளின் கூட்டம்; வதனம்–முகம்; மதிநுட்பம்–புத்திக் கூர்மை; மேனி–சரீரம்; இழிந்த–தாழ்ந்த; குற்றேவல்–சிறு தொழில்; ஏற்றம்–உயர்வு; கல்வித்துறை–கல்வியாகிய இடம்; சுதந்

திரம்–சுயவுரிமை; ஏனைய–மற்ற; புறங்காட்டி–முதுகு காட்டி; வசதி–சௌகரியம்; சமயம்–மதம், கொள்கை; நிருவாக ஸபை–காரியங்களை ஆலோசித்து நடத்தும் சபை.

1. ஜப்பான் தேசம் எங்கிருக்கிறது?
2. ஜப்பானியர் மானிடரில் எவ்வகையினராவர்? அவ்வினத்தைச் சார்ந்த வேறு தேசத்தவரைக் கூறுக.
3. ஜப்பானியரில் தோற்றத்தை விளக்குக.
4. ஜப்பானியர்களில் மேல் வகுப்பினர் எவ்வாறு விளங்குவர்?
5. ஜப்பானியரில் சாதாரணக் குடிகளின் தன்மையைக் கூறுக.
6. ஈற்று என்ற வகையினரைப் பற்றிக் கூறுக.
7. ஜப்பானியர்களின் வீடு எவ்வாறு அமைக்கப் பெறும்?
8. ஜப்பானியர்களின் உயரிய குணங்களிற் சிலவற்றைக் குறிப்பிடுக.
9. காற்றுடித் திருநாளைப்பற்றிக் கூறுக.
10. ஜப்பானியர் சமயம் யாது? அவர்கள் முன் வழிபட்டு வந்த தெய்வம் யாது?
11. ஜப்பான் சக்கரவர்த்தியின் பட்டப் பெயர் யாது?
12. ஜப்பான் அரசாட்சியை விளக்குக.

---

## 16. உழைப்பின் மேன்மை

மூலப்பொருள்–இயற்கைப் பொருள்; கோலம்–அழகு; குகை–மலையிலுள்ள பெரிய பொந்து; உராய்ந்து–உறைந்து செல்வது; ஊன்–மாமிசம்; நீர்ப்பாசனம்–தண்ணீர் பாயும் வழி; தூய்மை–பரிசுத்தம்; முன்னேற்றம்–மேன்மையடைதல்; திருவினை–செல்வத்தை; உபகரணம்–துணைக்கருவி.

1. மானிடர்கள் நெருப்பை எவ்வாறு பெற்றுவந்தனர்?
2. முதலில் நெருப்பு எதற்குப் பயன்பட்டது?
3. முதல் முதல் மானிடர்கள் எவற்றைத் தங்கள் ஆயுதங்களாகக் கொண்டனர்?
4. கப்பல் முதலில் எவ்வாறு அமைக்கப் பெற்றது?
5. 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' 'முயற்சி திருவினையாக்கும்' இவற்றிற்குப் பொருள் கூறுக.

---

## 17. ரோஜாச் செடி

வனப்பு-அழகு; கோளநாடு-மலையாள நாடு, சேரதேசம்; பைப்பு- இளகிய பசைபோன்ற தன்மை; வடிகால்-நீர் வடிய அமைந்துள்ள வாய்க்கால்; முதியவர்-கிழவர்.

1. ரோஜா என்ற பெயரின் வரலாற்றைக் கூறுக.
2. ரோஜாக்களில் எவ்வளவு வகை யுண்டு?
3. மூன்று வித ரோஜாச் செடிகள் எவை?
4. ரோஜா மலர்களிற் சிறந்தது எது?
5. ரோஜா பயிரிடுவ தெப்படி?
6. ரோஜாவுக்குள்ள நோய்களையும் அவற்றிற்கு செய்யக்கூடிய பரிகாரங்களையும் விளக்குக.
7. ரோஜாமலரின் உபயோகங்களைக் குறிப்பிடுக.

---

## 18. கானல் நீர் அல்லது பேய்த்தேர்

மாயை-மயக்கம்; துயர்-துன்பம்; படலம்-படர்ந்த உருவம்; பிரதிபிம்பம்-எதிர் தோன்றும் உருவம்; அரிதாய்-அபூர்வமாய்; விஸ்தரித்து-பெருக்கி; பிரதிபலிப்பது-ஒன்றின் உரு வேறொன்றில் தோன்றுவது; ஊர்வது-நகர்ந்து செல்வது; புயல்-மேகம்; விசித்திரம்-விநோதம், மிக்க அழகு.

1. கானல்நீர் என்பதென்ன?
2. கானலுக்குப் பேய்த்தேரென்று கூறப்படுவ தேன்?
3. கானல் தோற்றம் எங்கெங்குக் காணப்படும்?
4. கானலில் ஏமாறுவோர் படுந்துயரங்களை விளக்குக.
5. ஒட்டகம் ஏன் கானலால் ஏமாற்ற மடைவதில்லை?
6. கானல் உண்டாவதற்குக் காரணம் என்ன?
7. கானலின் தன்மைகளை விளக்குக.

---

## 19. கலய நாயனார்

காலன்-இயமன்; காலகாலர்-இயமனுக்கு இயமனாகிய சிவபெருமான்; வீரட்டானம்-வீரச்செயலைக் காட்டிய தலம்; பதி-இடம்; கால்நடை-ஆடு மாடுகள்; தூபம்-புகை; வேதியர்-வேதம் உணர்ந்தவர், பிராமணர்; மறையவர்-பிராமணர், (மறை-வேதம்) அந்தணர்-பிராமணர்

பொற்பொதி—பொன்மூட்டை; இல்லம்-வீடு; நாவார—நாவினால் நன்றாக; அசரீரி—சரீரமற்றது; அகத்தில்-வீட்டில்; நிகழ்ந்ததை—நடந்ததை; நவின்றனர்—சொன்னார்; பரிவாரம்—உடனிருக்கும் கூட்டம்; வேழம்—யானை; குஞ்சரம்—யானை.

1. சிவபெருமானுக்குக் காலகாலர் என்ற பெயர் வந்ததேன்?
2. திருக்கடவூரில் கோயில் கொண்டுள்ள சிவபெருமான், அம்பிகை இவர்களது பெயர்கள் யாவை?
3. கலய நாயனாருக்குச் சிவபெருமான் திருவருள் புரிந்ததை விளக்குக.
4. திருப்பனந்தாளில் அந்நாயனார் அருஞ்செயலைக் குறிப்பிடுக.

மார்க்கண்டேயர்:—இவர் மிருகண்டு என்னும் ஒரு முனிவர் குமாரர். இவர் சிவபெருமானைப் பக்தியோடு பூஜைசெய்து வழிபட்டு வந்தனர். இவருக்குப் பதினாறுவயது ஆனதும் ஆயுட்காலம் முடிவடைந்தது. அதனால் இயமன் இவரது உயிரைக் கவர வந்தனன். அவனைக்கண்டு அஞ்சிய மார்க்கண்டேயர் திருக்கடவூரில் சிவபெருமான் ஸந்நிதியை யடைந்து, அந்த லிங்கத்தைத் தமது கைகளால் கட்டிக் கொண்டு, பலவாறு துதித்து அழுதனர். இயமன் அருகே அணுகி, அம் மார்க்கண்டேயரைத் தனது பாசத்தாற்பற்றி இழுத்தனன். அவ்வேளை சிவபெருமான் கோபத்தோடு அந்த லிங்கத்தினின்றும் தோன்றித் தமது சூலத்தால் இயமனை மாய்த்து அம் மார்க்கண்டேயரைக் காத்தருளினார். மேலும், அப்பரமன், அம்மார்க்கண்டேயருக்கு என்றும் இறவாத வரமும் அருளினார். இதனால் அந்தத் திருக்கடவூரில் கோயில் கொண்டு விளங்கும் சிவபெருமானுக்கு, காலகாலர், எமஸம்ஹாரமூர்த்தி, மிருத்யுஞ்ஜயர், எனப் பெயர்கள் வழங்கலாயின.

திருப்பனந்தாளில் சிவ லிங்கம் சாய்ந்த வரலாறு:—திருப்பனந்தாளில் உள்ள சிவ லிங்கப் பெருமானை முன் தாடகை என்னும் அரக்கி வழிபட்டு வணங்கிவந்தனள். அவள் தினந்தோறும் அப் பெருமானுக்குத் தும்பைப் பூக்களை எடுத்து மாலையாகச் செய்து, அணிவது வழக்கம். ஒருநாள் அவள், அம் மாலையை இருகரங்களால் எடுத்து அச்சிவலிங்கத்தின்மீது அணியும்போது அவளது ஆடை நழுவிக் கீழே சரியத் தொடங்கியது. அவ்வேளை மாலையைக் கீழே வைக்கவும், ஆடையை நழுவவிடவும் மனமின்றி அவள் தத்தளித்தனள். அவளது உண்மையான பக்தியைக் கண்டபரமன், மகிழ்ந்து, தாமே குனிந்து அம்மாலையை ஏற்றுக் கொண்டனர். அதனால் அன்றுமுதல் அந்தலிங்கம் சாய்ந்தே இருந்தது. பின் கலயனார் தமது பக்தியின் வலிமையால் நிமிர்த்தினார்.

ஆயினும் அந்தலிங்கம் இன்றும் சிறிது சாய்ந்தவண்ணமாகவே விளங்குகின்றது காணலாம்.

வீரட்டானங்கள் எட்டு. அவையாவன :—

திருக்கண்டியூர் — பிரமன் சிரங்களில் ஒன்றைச் கொய்த இடம்.
திருக்கோவலூர் — புரந்தராஸுரனைக் கொன்ற இடம்.
திருவதிகை — திரிபுர ஸம்ஹார ஸ்தலம்.
திருப்பறியலூர் — தக்ஷனை ஸம்ஹரித்த தலம்.
திருவிற்குடி — சலந்தராசுரனை வதைத்த இடம்.
திருவழுவூர் — கஜஸம்ஹாரம் செய்த விடம்.
திருக்கொறுக்கை — மன்மதனை எரித்த தலம்.
திருக்கடவூர் — எம ஸம்ஹார ஸ்தலம்.

---

## 20. காவிரி நதி

கடவுள் நதி—தெய்வத்தன்மை வாய்ந்த நதி; நங்காய்!-பெண்ணே! வினை—பாவம்; தவிர்ப்பாய்—போக்குவாய்; அம்—அழகிய ; கார்—மேகம்; அணவும்-பொருந்தும், சூழும்; சிங்காரம்—மிக்க அழகு; இலங்க-விளங்க; பாகு—சர்க்கரைப் பாகு; கோன் மாறினும்—அரசனது செங்கோல் மாறினும்; கோள்—கிரகங்கள்; வான் மாறினும்—மழை பெய்யாது மாறு பட்டாலும்; தான் மாறிலா—தன் நிலைமையில் மாறாத; வளர்காவிரி—நீர்ப் பெருக்கினால் வளர்கின்ற காவிரி; கன்னல்—கரும்பு; கதலி—வாழை.

1. தெய்வ நதிகளில் சிறந்தவை—கங்கை, ஸிந்து, யமுனை, கோதாவரி, கிருஷ்ணை, மகாநதி, காவிரி, தாமிரபர்ணி.

2. காவிரி நதியின் சிறப்புக்களைக் கூறுக.

கவேர ராஜகுமாரி ஆதலின் காவேரி யெனப் பெயர் பெற்றது. இது தத்திதாந்தம். கங்கை முதலிய நதி தேவதைகள் அனைவரும் வருஷம்தோறும் காவேரி நதியை அடைந்து நீராடி, தங்களிடம் பலர் நீராடிச் சென்றதால் தங்கிய பாவங்களினின்றும் விடுபட்டுப் பரிசுத்தம் அடைந்து தத்தம் இருப்பிடம் செல்வர் என்பது காவேரி மஹாத்மியம் என்னும் புராணத்தில் காணப்படுவதாகும். காவேரி என்பது காவிரி யெனத் திரிந்து தமிழில் வழங்கும்.

---

## 21. கண்ணம்பாடி நீர்த்தேக்கம்

பிரவாகம்—வெள்ளம்; அமைதி—சமாதானம்; நீர்வீழ்ச்சி—நீர்மேட்டி லிருந்து கீழே விழும் இடம் (Waterfall); மின்சாரசக்தி (Electricity); தரிசு—பயிரிடாத நிலம்; தேஜோமயம்—அதிக வெளிச்சம்.

1. காவிரி நதி பாயும் இடங்களைக் குறிப்பிடுக.
2. கண்ணம்பாடி அணையின் அமைப்பை விளக்குக.
3. கண்ணம்பாடி அணையால் உண்டாகும் நலன்கள் யாவை?
4. இவ்வணையைப் பற்றிய சரித்திர விசேஷம் யாது?

---

## 22. நித்திரை

இந்திரியங்கள்-மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய உறுப்புக்கள்; களியாட்டு—உற்சவம், கொண்டாட்டம்; துயில்—தூக்கம்; பலகணி—ஜன்னல்; சேக்கை—படுக்கை; அருவருப்பு—வெறுப்பு; திடகாத்திரம்—வலிமை வாய்ந்த சரீரம்; கிடக்குங்கால்—படுக்கும்போது; கோணம்-மூலை; தலை செய்யார்—தலைவைத்துக் கொள்ளார்; மீக்கோள்—போர்வை.

1. நாம் உடலைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டியதேன்?
2. நாம் உடலை ஏன் ஒரு இயந்திரத்திற்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது?
3. நமது சுக வாழ்விற்கு நித்திரை யெவ்வாறு அவசியமாகும்?
4. படுக்கும் அறை எவ்வாறு இருக்கவேண்டும்?
5. நித்திரைக்கு ஏற்ற அளவு எது?
6. வாயைத் திறந்து தூங்குவதால் உண்டாகும் தீமை யாவை?
7. நித்திரை விஷயமாக ஆன்றோர் விதித்துள்ள சட்டமியாது?

---

## 23. கிரகங்கள் (இரண்டாம் பாகம்.)

இரவி—சூரியன்; வெண்மதி—வெண்மையான சந்திரன்; தூர திருஷ்டிக்கண்ணாடி—வெகு தூரத்திலுள்ள பொருளைச் சமீபத்தில் இருப்பது போலத் தெரிவிக்கும் ஒரு கருவி; ஆதவன்—சூரியன்,

1. செவ்வாய் சூரியனைச் சுற்றிவர எவ்வளவு காலஞ் செல்லும்?
2. சூரியனுக்கும் செவ்வாய்க்கு முள்ள தூரம் யாது?
3. செவ்வாய்க்குள்ள வேறு பெயர் யாது?
4. குருவுக்குள்ள வேறு பெயர்கள் யாவை?
5. குரு சூரியனைச் சுற்றிவர எவ்வளவு காலம் பிடிக்கும்?
6. குருவுக்கும் சூரியனுக்கு முள்ள தூரம் யாது?
7. குருவுக்கு எவ்வளவு உபகிரகங்கள் இருக்கின்றன?
8. சனி சூரியனைச் சுற்றிவர எவ்வளவு காலஞ் செல்லும்?
9. சனியின் உருவத்தில் உள்ள விசேஷ மென்ன?
10. யுரேனஸ் என்ற கிரகம் யாரால் எப்பொழுது கண்டு பிடிக்கப் பெற்றது?
11. யுரேனஸ் சூரியனைச் சுற்றிவர எவ்வளவு காலஞ் செல்லும்?
12. நெப்டியூன் என்ற கிரகத்தின் தன்மையை விளக்குக.

---

## 24. ஒரு சாரண வீரன்

தலையிடு—குறடு; தாழ்க்காது—தாமதிக்காமல்; பரிதாபமான—இரங்கப்படத்தக்க; போர் முனை—போர்க்களம்.

1. வீதாப்பூர் என்பது எங்குள்ளது?
2. குருப்பிரஸாத் படித்துக் கொண்டிருந்தபோது நிகழ்ந்த தென்ன?
3. குருப்பிரஸாத் குழந்தையை எவ்வாறு காப்பாற்றினன்?
4. குருப்பிரஸாத் ஏன் பரீக்ஷைக்குப் போகவில்லை.
5. குருப்பிரஸாத் அடைந்த பெருமை யாது?
6. குருப்பிரஸாத்தினிடம் அமைந்திருந்த சாரணன் லக்ஷணங் களைக் குறிப்பிடுக.
7. ஸில்வர் கிராஸ் என்னும் பதக்கத்தின் சிறப்பைக் குறிப்பிடுக.
8. ஸில்வர் கிராஸ் பதக்கத்தின் உருவம் ஒன்று வரைக.
9. சாரணன் அனுசரிக்கவேண்டிய விதிகளைத் தொகுத்து எழுதுக.

---

## 25. காகிதம்

பாராயணம்—ஓதுதல்; தரவாரி—தன்மைக்கு ஏற்றவாறு; துணுக்கு—துண்டு; மென்மை—மிருது; வேய—மூட.

1. நம் முன்னோர்கள் புஸ்தகங்கள் எவ்வாறு அமைத்துக் கொண்டனர்?
2. யாழ்ப்பாணத்து ஓலைகளின் தன்மை என்ன?
3. காகிதம் செய்ய முதலில் அறிந்தவர் யார்?
4. காகிதம் செய்வது எப்படி?
5. ஜப்பானியர் காகிதத்தை எவ்வெவ் விதங்களில் உபயோகிக்கின்றனர்?
6. ஜர்மானிய யுத்தத்தில் காகிதங்கள் எவ்வாறு உபயோகப்பட்டன?
7. அமெரிக்கர்கள் காகிதத்தை எவ்வாறு உபயோகிக்கின்றனர்?
8. காகிதங்கள் நாணயமாவது எப்படி?

---

## 26. புலி

அடவி—காடு, தசை—மாமிசம்; சாகபக்ஷிணி—புல், பூண்டு, தானியம் முதலியவற்றைத் தின்று சீவிக்கும் பிராணி; தவிர்த்து—நீக்கி; நரன்—மனிதன்; மரபு—வழக்கம்.

1. புலி பிராணிகளில் எவ்வினத்தைச் சேர்ந்தது?
2. புலி காடுகளில் எங்கு வசிக்கும்?
3. புலிக்குட்டி பிறந்தவுடன் எவ்வாறு தோன்றும்?
4. புலிக்குக் கோரப்பல் எப்பொழுது தோன்றும்.
5. புலி எருமை முதலிய பிராணிகளை எவ்வாறு கொல்லும்?
6. புலி ஏன் இரவில் இரைதேடப் புறப்படுகின்றது?
7. புலி வருவதைக் கானிலுள்ள மற்ற விலங்குகள் எவ்வாறு தெரிந்து கொள்ளும்?
8. புலிக்கு எந்த மிருகங்களைக் கண்டால் அச்சம் அதிகம்? ஏன்?
9. சிறுத்தைப்புலியின் தன்மைகளை விளக்குக.
10. புலிக்குச் சித்திரகாயம் எனப் பெயர் வழங்குவது ஏன்?
11. புலிக் குட்டியை எவ்வாறு கூறுவது மரபு?
12. புலி வேட்டை ஆடுவதேன்?

---

## 27. துதிக் கவிகள்

பாட்டு—1. முன்னவன்—யாவர்க்கும் முன்னே தோன்றினவன்; சிற்பரன்—ஞான வடிவான கடவுள்; சேகரன்—முடியை யுடையவன்; தற்பரன்—மேலான கடவுள்.

பாட்டு—2. பண்தாழும்—பாடல் தோற்கும்; விமலை—பரிசுத்த மானவள்.

பாட்டு—3. கந்தன்—முருகக் கடவுள்; கடம்பன்—கடம்ப மலர் அணிந்தவன்; பற்று—உரியவிடம், பற்றுதலாக உள்ள இடம்.

பாட்டு—4. அமலன்—குற்றமற்றவன்; அழல்—நெருப்பு; ஒரு மாது—ஒப்பு அற்ற பெண்ணாகிய உமாதேவி; அவிர்—விளங்குகின்ற; முகில்—மேகம்; மால்—திருமால்; கமலத்தவன்—தாமரை மலரிலுள்ள பிரமதேவன்.

(திருமால் பன்றியாகச் சிவபெருமான் திருவடியையும், பிரமன் அன்னப் பக்ஷியாகச் சிவபெருமான் முடியையும் தேடிச்சென்று காணாமல் மீண்டனர் என்பது புராணக் கதை.)

பாட்டு—5. நளின மடந்தை—தாமரை மலர் மீது வாழும் லக்ஷ்மி; பெம்மான்—பெருமான்; தேராளாய்—தேரோட்டும் சாரதியாய்; பார்த்தன்—அருச்சுனன் (பிரதை புத்திரன் பார்த்தன், தத்திதாந்தம்) தீர்த்தன்—பரிசுத்தமானவன்; திக்கு—கதி.

பாட்டு—6. அளி—கிருபை; நோக்கு—கண்; சீர்—அழகு; உவந்து—விரும்பி.

பாட்டு—7. தாரணி—பூமி—தரணி என்பதின் நீட்டல் விகாரம்.

திருமால் வாமன மூர்த்தியாகி மாவலியிடம் சென்று மூன்றடி மண் இரந்து, இவ்வுலகை ஓர் அடியிலும் சுவர்க்கத்தை மற்றோர் அடியாலும் அளந்து மூன்றாவது அடியை அந்த மாவலி தலையிலேயே வைத்து அவனைப் பாதாளத்தில் செலுத்தினார்.

தேவர்களும் அசுரர்களுமாகப் பாற்கடலில் மந்தரம் என்னும் மலையை நட்டு, வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகச் சுற்றிக் கடைந்த போது அப் பாற்கடலிலிருந்து ஐராவதம், கற்பகம், சந்திரன், அமிர்தம் முதலிய பல அரிய பொருள்களோடு திருமகளும் தோன்றினள்.

# செய்யுட் பாடங்கள்

## I. வாக்குண்டாம் என்னும்

## மூதுரை

[இந்நூல் ஔவையாரால் இயற்றப் பெற்றது. மூதுரை என்பதற்குப் பழமையான நீதி உரைகள் அமைந்த நூல் என்பது பொருள். வாக்குண்டாம் என்று தொடங்கும் கடவுள் வணக்கச் செய்யுளை முதலில் உடையதால், இந்நூல் வாக்குண்டாம் என்ற முதற் குறிப்பையே பெயராகக் கொண்டு வழங்கப் பெறுவதும் உண்டு.]

### பாட்டு 1. வாக்குண்டாம் :—

**பதவுரை** :—பூக் கொண்டு—புஷ்பங்களைக் கொண்டு; துப்பு ஆர் திருமேனி—பவளம் போன்று சிவப்பு நிறமாக விளங்கும் அழகிய சரீரத்தையுடைய; தும்பிக்கையான் பாதம்—துதிக்கையை யுடைய விநாயகக் கடவுளின் பாதங்களை; தப்பாமல்—தவறாமல்; சார்வார் தமக்கு—அடைந்து வணங்குவோர்க்கு; வாக்கு உண்டாம்—நன்றாகப் பேசு திறமை உண்டாகும்; நல்லமனம் உண்டாம்—நல்ல எண்ணம் உண்டாகும்; (கெட்ட எண்ணம் உதிக்காது) மாமலரான் பெருமை பொருந்திய தாமரை மலர்மேல் வீற்றிருக்கும் லக்ஷ்மி தேவியின்; நோக்கு உண்டாம்—கிருபாகடாக்ஷம் உண்டாகும்; (செல்வம் பெருகும்) மேனி நுடங்காது—சரீரம் இளைக்காது; அல்லது நோயினால் வருந்தாது.

கருத்து:—விநாயகக் கடவுளை வணங்குவோர்க்கு, நல்வாக்கும், நல்லமனமும், செல்வமும் தேக ஆரோக்கியமும் உண்டாகும். வாக்குண்டாம் என்பதால் சரஸ்வதி கடாக்ஷம் என்று சொல்லலாம். நல்ல என்ற சொல்லை, வாக்குண்டாம், என்றதோடு கூட்டலாம்.

| எழுவாய் | | பயனிலை |
|---|---|---|
| வாக்கு | ... | உண்டாம் |
| மனம் | ... | உண்டாம் |
| மாமலராள் நோக்கு | ... | உண்டாம் |
| மேனி | ... | நுடங்காது |

**பாட்டு 2. நன்றியொருவருக்கு :—**

**பதவுரை** :—நின்ற-நிலை பெற்ற; தளரா-சோர்வடையாமல்; வளர்-வளர்கின்ற; தெங்கு-தென்னைமரம்; தாளுண்ட-தன் அடிவேரினால் உண்ட; நீரை-ஜலத்தை; தலையாலே-தன் தலையிலே உண்டாகும் இளநீராலே; தான் தருதலால்-தான் திருப்பி உதவுகிறபடியால் :— ஒருவற்கு-(நற்குணமுடைய) ஒரு மனிதனுக்கு; நன்றி செய்தக்கால்-ஒரு உபகாரத்தைச் செய்தால்; அந் நன்றி-அந்த உபகாரத்தை; என்று தருங்கொல்-(அவன்) எப்பொழுது திருப்பிச் செய்வானோ; என வேண்டா-என்று சந்தேகப்பட வேண்டாம்; (நாம் செய்ததை விடச் சிறப்பான பிரதியுபகாரத்தை அவன் செய்வன் என்பதாம்.)

கருத்து :—நற்குணமுடையவனுக்கு ஓர் உபகாரம் செய்தால் அது வீண் போகாது.

கொல்-சந்தேகப் பொருளைக் காட்டும் உரிச்சொல்.

தரும்-தருவான். இது திணை வழுவமைதி;

| எழு. | பய. | செய. |
|---|---|---|
| நீ (தோன்றா எழுவாய்) ... | எனவேண்டா | ... |

**பாட்டு 3. உற்றவிடத்தில் :—**

**பதவுரை**:— கல்தூண்-கல்லாலாகிய கம்பம்; பெரும்பாரம் தாங்கின்-பெரிய சுமையைத் தாங்கினால்; பிளந்து இறுவது அல்லால்-பிளந்து ஒடியுமே அல்லாமல்; தான் தளர்ந்து வளையுமோ-அது, தளர்ச்சி பெற்று வளையுமோ? (வளையாது) (அதுபோல)-உற்ற இடத்தில்-தமக்கு மானக்கேடு வந்த இடத்தில்; உயிர் வழங்கும் தன்மையோர்-தமது உயிரையே விட்டுவிடும் மேலான குணமுடைய பெரியோர்; பற்றலரைக் கண்டால்-தம் பகைவரைக் கண்டால்; பணிவரோ-(அவரைக் கண்டு பயந்து) வணங்குவாரோ? வணங்க மாட்டார். (பற்று + அலர்-அன்பில்லாதவர், பகைவர்).

கருத்து :—மானிகள் ஆபத்து வந்த போது தம் உயிரை விடுவரே அன்றிப் பகைவரை வணங்கி அவமானப் பட மாட்டார்.

"கற்றான் பிளந்திறுவதல்லால் பெரும்பாரம் தாங்கின் தளர்ந்து வளையுமோ தான்;" என்பது உபமானம். "உற்றவிடத்தில் உயிர் வழங்கும் தன்மையோர் பற்றலரைக் கண்டால் பணிவரோ;" உபமேயம்.

| எழு. | | பயனிலை. | | செய. |
|---|---|---|---|---|
| உயிர் வழங்கும் தன்மையோர் | ... | பணிவரோ | ... | பற்றலரை |
| கற்றூண் | ... | வளையுமோ | ... | ... |

பாட்டு 4. நீரளவே யாகுமாம் :—

பதவுரை :—நீராம்பல்—நீரில் வளரும் அல்லி; நீரளவே—தான் வளரும் நீரின் அளவாகவே; ஆகும்—உயர்ந்து நிற்கும்; (அதுபோல) நுண் அறிவு—நுட்பமாகிய அறிவானது; தான் கற்ற—தான் கற்றுணர்ந்த; நூல் அளவே—நூல்களின் அளவாகவே; ஆகும்—உண்டாகும்; தான் பெற்ற செல்வம்—தான் இப்பொழுது அடைந்துள்ள செல்வம்; மேலை—முற்பிறப்பில் செய்த; தவத்து அளவே—தவத்தின் அளவாகவே; ஆகும்—உண்டாகும்; குணம்—(ஒருவனுடைய) குணமானது; குலத்து அளவே—பிறந்த குலத்தின் அளவாகவே; ஆகும்—உண்டாகும். (ஆம்—அசைச்சொல்) தவம்—இங்கு நல்வினை,

கருத்து:— ஒருவருக்கு அறிவு கற்ற நூலளவாகவும், செல்வம் முன் செய்த நல்வினை அல்லது தவத்தின் அளவாகவும், குணம் தான் பிறந்த குலத்தின் தன்மைக்கு ஏற்றபடியும் உண்டாம்.

| எழு. | | பய. |
|---|---|---|
| 1. நீராம்பல் | ... | நீரளவே யாகும் |
| 2. நுண்ணறிவு | ... | நூலளவே யாகும் |
| 3. பெற்ற செல்வம் | ... | தவத்தளவே யாகும் |
| 4. குணம் | ... | குலத்தளவே யாகும். |

பாட்டு 5. நெல்லுக் கிறைத்த நீர் :—

பதவுரை:— நெல்லுக்கு—நெற்பயிருக்கு; இறைத்த—இறைக்கப்பட்ட; நீர்—சலம்; வாய்க்கால் வழி ஓடி—வாய்க்காலின் வழியாகப் போய்; ஆங்கே—அந்த வாய்க்காலின் இடத்தேயுள்ள; புல்லுக்கும்—புல்லுக்கும்; பொசியும்—கசிந்து ஊறும்

(அது போல) தொல் உலகில்-பழமையாகிய இவ்வுலகத்தில் நல்லார் ஒருவர்-நல்லவராகிய ஒருவர்; உளரேல்-இருப்பாரானால்; அவர் பொருட்டு-அந்த நல்லவருக்காக; எல்லார்க்கும்-மற்ற எல்லார்க்கும்; மழை பெய்யும்-மழை பெய்கின்றது. நெல்-இங்கு நெற்பயிரைக் குறிப்பிட்டது. (சினையாகு பெயர்) புல்லுக்கும்-இழிவுச் சிறப்பு உம்மை.

கருத்து :—நல்லவரைச் சேர்ந்த பிறரும் நன்மையடைவர்.

நெல்—உபமானம்—நல்லார் உபமேயம்.

புல்—உபமானம்—(பிறர்) எல்லாரும் உபமேயம்.

| எழு. | | பய. |
|---|---|---|
| 1. நீர் | ... | பொசியும் |
| 2. மழை | ... | பெய்யும் |

## பாட்டு 6. பண்டு முளைப்பது :—

பதவுரை :—பண்டு-(உமி நீக்குவதற்கு) முன்னே; முளைப்பது-முளைப்பது அரிசியே ஆனாலும்-அரிசியாகவே இருந்தாலும்; உமி விண்டு போனால்-உமி நீங்கிப் போய் விட்டால்; முளையாது-(அந்த அரிசி) முளைக்காது; (அது போல) கொண்ட-அடைந்த; பேர் ஆற்றல்-மிக்க வல்லமை; உடையார்க்கும்-உடையவர்களுக்கும்; அளவு இன்றி-துணை வலி இல்லாமல்; ஏற்ற கருமம்-தாம் மேற் கொண்ட காரியத்தை; செயல் ஆகாது-செய்தல் முடியாது.

"பண்டு முளைப்ப தரிசியே யானாலும் விண்டுமி போனால் முளையாதாம்;" உபமானம். "கொண்ட பேராற்ற லுடையார்க்கும் ஆகா தளவின்றி ஏற்ற கருமம் செயல்;" உபமேயம்.

கருத்து :— மிக்க வல்லமை யுடையவருக்கும் துணை வலி இன்றி எடுத்த காரியம் இனிது முடியாது.

| எழு. | | பய. |
|---|---|---|
| 1. அரிசி | ... | முளையாது |
| 2. கருமம் செயல் | .. | ஆகாது |

## பாட்டு 7. அற்ற குளத்தில் :—

பதவுரை :—அற்ற நீர் வற்றிய; குளத்தின்-குளத்தினின்றும்; அறும்-நீங்கிப் போகும்; நீர்ப் பறவை போல்-நீரில்

வாழும் கொக்கு, நாரை முதலிய பறவைகள் போல; உற்றுழி—(ஒருவனுக்கு) துன்பம் அல்லது வறுமை வந்த போது; தீர்வார்—அவனை விட்டு நீங்குபவர்; உறவு அல்லர்—பந்துக்கள் ஆகார்; அக் குளத்தில்—அந்த நீர் வற்றிய குளத்தில்; கொட்டியும்—கொட்டிப் பூண்டும்; ஆம்பலும்—அல்லிக் கொடியும்; நெய்தலும்—நெய்தற் கொடியும்; போலவே—போல; ஒட்டி-சேர்ந்திருந்து; உறுவார்—சுக துக்கங்களை அனுபவிப்பவர்; உறவு—உண்மையான பந்துக்கள் ஆவர். (உற்ற+உழி-உற்றுழி அகரம் தொகுத்தல் விகாரம்.)

| உபமானம். | | உபமேயம். |
|---|---|---|
| நீர்ப் பறவை | ... ... | உற்றுழித்தீர்வார் |
| கொட்டி ஆம்பல் நெய்தல் | ... ... | ஒட்டி உறுவார் |

| எழு. | | பய. |
|---|---|---|
| உற்றுழித் தீர்வார் | ... | உறவு அல்லர் |
| ஒட்டியுறுவார் | ... | உறவு |

பாட்டு 8. கல்லாத மாந்தர்க்கு :—

**பதவுரை** :— மெல்லிய – மெல்லியதாக உள்ள; வாழைக்கு வாழை மரத்திற்கு; தான் ஈன்ற—தான் பெற்ற; காய் கூற்றம்—காய் காய்களே இயமனாகும்; (அது போல) கல்லாத மாந்தர்க்கு—கற்றுணராத மனிதருக்கு; கற்று உணர்ந்தார் சொல்—கற்றுணர்ந்த பெரியோர் சொல்லும் உறுதி மொழிகள் கூற்றம்—இயமன் போலத் தோன்றும்; அல்லாத மாந்தர்க்கு—(தரும சிந்தனை) அல்லாத மனிதருக்கு; அறம் கூற்றம் தருமமே இயமனாகும்; இசைந்து—கணவன் கருத்துக்கு உடன்பட்டு; ஒழுகாப்பெண்—நடக்காத மனைவி; இல்லிற்குக் கூற்றம்—அந்த வீட்டிற்கே இயமனுக்குச் சமமாவள்.

கருத்து :—கற்றறிந்தவருடைய உறுதி மொழி கல்லாதவருக்கு இயமன் போலாகும்; பாவிகளுக்குத் தருமம் இயமன் போலாகும்; கணவனுக்கு அடங்கி நடக்காத பெண் அந்தக் குடும்பத்திற்கே இயமன் போல் ஆவள்.

'மெல்லிய வாழைக்குத் தானீன்ற காய் கூற்றம்' உபமானம் மற்றவை உபமேயம்.

| | எழு. | | | பய. |
|---|---|---|---|---|
| 1. | கற்றுணர்ந்தார் சொல் | ... | ... | கூற்றம் |
| 2. | அறம் | ... | ... | கூற்றம் |
| 3. | காய் | ... | ... | கூற்றம் |
| 4. | இல்லிற்கு இசைந் தொழுகாப் பெண் | | ... | கூற்றம் |

பாட்டு 9. நஞ்சுடைமை தானறிந்து :—

பதவுரை :—நாகம்-நாசப் பாம்பு; தான் நஞ்சு உடைமை அறிந்து-தான் விஷம் அடைந்திருத்தலை அறிந்து; கரந்து உறையும்-ஒளிந்து வசிக்கும்; நீர்ப்பாம்பு-(தன்னிடம் விஷமில்லாத) தண்ணீர்ப் பாம்பு; அஞ்சா-பயப்படாமல்; புறம் கிடக்கும்-வெளியிலே கிடக்கும் (அவை போல) நெஞ்சில் கரவு உடையார்-மனத்தில் வஞ்சனை புடையவர்; தம்மைக் கரப்பர்-தம்மை மறைத்துக் கொள்வர்; கரவு இலா நெஞ்சத்தவர்-வஞ்சனை யற்ற மனமுடையவர் ; கரவார்-தம்மை மறைக்க மாட்டார்.

கருத்து :—வஞ்சகர் மறைந்து வாழ்வர்; வஞ்சனை யில்லாதவர் மறையாமல் வெளிப்பட்டு வாழ்வர்.

| | எழு. | | பய. | செய. |
|---|---|---|---|---|
| 1. | நாகம் | ... | கரந்துறையும் | ... |
| 2. | நீர்ப்பாம்பு | ... | புறங்கிடக்கும் | ... |
| 3. | கரவுடையார் | ... | கரப்பர் | தம்மை |
| 4. | கரவிலா நெஞ்சத்தவர் | | கரவார் | (தம்மை) |

பாட்டு 10. சந்தன மென் குறடு :—

பதவுரை:— சந்தன மென் குறடு-சந்தனமரத்தின் மிருதுவான கட்டை; அல்லது மெல் சந்தனக் குறடு-மிருதுவான சந்தனக் கட்டை; தான் தேய்ந்த காலத்தும்-தான் தேய்ந்து போன போதும்; கந்தம் குறைபடாது-தன்னுடைய வாசனையில் குறைந்து போகாது; ஆதலால்-ஆகையினால்; தார் வேந்தர்-மாலை அணிந்த அரசர், அல்லது சேனையை உடைய

அரசர் ; கெட்டால்–கெட்ட நிலைமையை அடைந்தால் ; மனம் சிறியர் ஆவரோ–மன வலிமையில் அதாவது தைரியத்தில் குறைந்தவர் ஆவரோ? (ஆகார்) (மற்று–அசை) தார்–மாலை, அல்லது சேனை.

கருத்து :— மேலோர் செல்வத்திற் குறைந்தாலும் ஒருபோதும் தம் மனவலிமையில் குறையார்.

| எழு. | | பய. |
|---|---|---|
| 1. கந்தம் | ... | குறைபடாது |
| 2. தார் வேந்தர் | ... | மனஞ் சிறியராவரோ? |

## II. நல்வழி.

நல்வழி–நன்மார்க்கத்தைப் போதிக்கும் நூல். இந்நூலும் ஔவையாரால் இயற்றப் பெற்றதென்பர். அவ்விதம் துணிந்து கூறுவதற்குத் தக்க ஆதாரங்கள் இல்லை.

பாட்டு 1. சாதி யிரண் டொழிய :—

பதவுரை :—சாற்றுங்கால்–(ஆராய்ந்து) சொல்லுமிடத்து; மேதினியில்–இவ்வுலகத்தில்; சாதி இரண்டு ஒழிய–சாதி இரண்டே அல்லாமல்; வேறு இல்லை–வேறு ஜாதிகள் கிடையாது; (அவ்விரண்டு ஜாதியாரும் யாவரெனில்)–நீதி வழுவா–நியாயம் தவறாத; நெறி முறையின்–நல்ல வழியில் நடக்கும் முறையையால்; இட்டார் பெரியோர்–(ஏழைகளுக்கு) கொடுத்தவர் மேலான ஜாதியர்; இடாதார்–(அப்படிக்) கொடாதவர்; இழிகுலத்தோர்–கீழ்ப்பட்ட ஜாதியர்; பட்டாங்கில் உள்ளபடி–(இது)உண்மையான பழைய நூல்களில் சொல்லிய விஷயமாகும். பட்டாங்கு–நடந்த விஷயம், உண்மை.

கருத்து :—ஏழைகளுக்குக் கொடுத்தவர் மேலான ஜாதியர். கொடாதவர் கீழான ஜாதியர் என்ற சாதி இரண்டு தான் உள்ளன.

| எழு. | | பய. |
|---|---|---|
| 1. வேறு | ... | இல்லை. |
| 2. இட்டார் | ... | பெரியோர். |

| | | |
|---|---|---|
| 3. இடாதார் | ... | இழிகுலத்தோர். |
| (இது) | ... | பட்டாங்கில் உள்ளபடி. |

பாட்டு 2. எண்ணி யொரு கருமம் :—

**பதவுரை** :—யார்க்கும்–எப்படிப்பட்டவர்க்கும்; புண்ணியம் வந்து–நல்ல காரியம் வந்து; எய்து போது அல்லால்–அடையும் காலத்தில் அல்லாமல்; எண்ணி–யோசித்து; ஒரு கருமம்–ஒரு காரியத்தை; செய் ஒண்ணாது–செய்து முடித்தல் முடியாது; (அது) கண்ணிலான்–குருடன்; மாங்காய் விழ எறிந்த–மரத்திலுள்ள மாங்காய் கீழே விழ வீசி யெறிந்த; மாத்திரைக் கோல் ஒக்கும் (மரத்தின் மீது தொற்றிக் கொண்ட அவனது) ஊன்று கோலை ஒத்திருக்கும்; அவர்க்கு–அவர்களுக்கு; ஆங்காலம்–நல்வினை வரும் நற்காலத்தில் ஆகும்–எண்ணிய காரியம் கைகூடும். நற்காலம் இல்லாவிடில் குருடன் கைக் கோலையும் இழந்தவாறு ஆகும்.

**கருத்து** :—நல்வினை இல்லாதவன், தான் எண்ணிய காரியம் முடியப் பெறுமற் போவதோடு கைப் பொருளையும் இழப்பன்.

| எழு. | பய. | | செய. |
|---|---|---|---|
| 1. கருமம் ... | செய் யொண்ணாது | | ... |
| 2. புண்ணிய மில்லாத காலத்திற் செய்யும் காரியம் | ஒக்கும் | ... | மாத்திரைக் கோலெறிதல் |
| (கருமம்) | ஆகும் | | ... |

பாட்டு 3. வருந்தி யழைத்தாலும் :—

**பதவுரை** :—வாராத–வரத்தகாதவைகள் ; வருந்தி–சிரமப்பட்டு; அழைத்தாலும்–கூப்பிட்டாலும்; வாரா–(அவை) வாராவாம்; பொருந்துவன–தம்மிடம் உள்ளவைகள்; போமின் என்றால்–போங்கள் என்று வெறுத்துத் தள்ளினாலும்; போகா–போக மாட்டா; இருந்து–(இவ்வுண்மையை அறியாமல் உலகில்) இருந்து கொண்டு; ஏங்கி–ஏக்கங் கொண்டு; நெஞ்சம் புண் ஆக–மனம் புண்ணாகும்படி; நெடுந்தூரம்–நீண்ட நேரம்; நினைந்து–எண்ணி; துஞ்சுவதே–இறந்து போவதே; மாந்தர் தொழில்–மக்களது தொழிலாய் இருக்கின்றது.

புண்ணாதல்-நொந்து போகுதல்; துஞ்சுவது-தூங்குவது இங்குச் சாதலை உணர்த்திற்று. (மங்கல வழக்கு).

கருத்து :— அவரவர் முன் செய்த வினைக்குத் தக்கவாறு உலகில் பயன்களை அனுபவிப்பர். ஆதலால் வீண் கவலைப்படுதல் அறியாமையே.

| எழு. | | பய. |
|---|---|---|
| 1. வாராத | ... | வாரா |
| 2. பொருந்துவன | ... | போகா |
| 3. துஞ்சுவது | ... | மாந்தர் தொழில். |

பாட்டு 4. ஒருநா ளுணவை :—

**பதவுரை** :—இடும்பை கூர்-துன்பம் மிகுந்த; என் வயிறே-எனது வயிறே; (நீ) ஒரு நாள் உணவை-ஒரு நாள் உட்கொள்ளும் உணவை; ஒழி யென்றால்-உண்ணாமல் விட்டிரு என்றால்; ஒழியாய்-விட்டிருக்கமாட்டாய்; இரு நாளுக்கு-இரண்டு நாள்களுக்கு; ஏல் என்றால்-(சேர்த்து ஒரே முறையில்) ஏற்றுக்கொள் என்றால்; ஏலாய்-ஏற்றுக் கொள்ளமாட்டாய்; ஒருநாளும்-ஒரு நாளாகிலும்; என்நோ-என்னுடைய வருத்தத்தை; அறியாய்-நீ அறிகிறதில்லை; (ஆதலால்) உன்னோடு வாழ்தல்-உன்னோடு சேர்ந்து வாழ்ந்திருத்தல்: அரிது-சிரமமானது.

கூர்-மிகுதிப் பொருளை உணர்த்தும் உரிச் சொல்.

(களிகூர்ந்தான் என்பது காண்க.)

கருத்து:—வயிற்றுக்குத் திருப்தி யுண்டாக்குவது மிக்க சிரமமான காரியம்.

| எழு. | | பய. | | செய. |
|---|---|---|---|---|
| (நீ) | ... | ஒழியாய் | ... | ஒரு நாள் உணவு |
| (நீ) | ... | ஏலாய் | ... | இருநாள் உணவு |
| (நீ) | ... | அறியாய் | ... | என் நோ |
| உன்னோடு வாழ்தல் | ... | அரிது | | ... |

**பாட்டு 5. தண்ணீர் நிலநலத்தால் :—**

**பதவுரை** :—தண்ணீர்–தண்ணீரின் தன்மை; நில நலத்தால்–அது தங்கியிருக்கும் நிலத்தினுடைய நன்மையைப் பொறுத்தும்; தக்கோர் குணம்–நல்லோருடைய குணம்; கொடையால்–ஏழைகளுக்குக் கொடுப்பதாலும்; கண்ணீர்மை–கண்களுடைய குணம்; மாறா–நீங்காத, வேறுபடாத; கருணையால்–அருளுடைமையாலும்; பெண் நீர்மை–பெண்களுடைய நல்லகுணம்; கற்பு அழியா ஆற்றல்–கற்பு நிலைமை கெடாத நடத்தையாலும்; (ஆவனவாம்) (இவை) கடல் சூழ்ந்த–கடல் சூழப்பெற்ற; வையகத்துள்–பூமியில்; அற்புதம் ஆம்–ஆச்சரியமானவைகளாம்; என்றே அறி–என்று நீ அறிவாயாக. கற்பு என்பது–கணவனாலும் பெரியோர்களாலும் கற்பிக்கப் பெற்ற நல்லொழுக்கம்; நீர்மை–தன்மை.

*கருத்து* :—நிலத்தின் நன்மையால் தண்ணீருக்கும்; கொடையினால் நல்லோர்க்கும்; அருளினால் கண்களுக்கும்; கற்பினால் பெண்களுக்கும் பெருமை யுண்டாம்.

| எழு. | | பய. | | செய. |
|---|---|---|---|---|
| (நீ) | ... | அறி | ... | (இவைகளை) |

**பாட்டு 6. நீரும் நிழலும் :—**

**பதவுரை** :—சிவந்த தாமரையாள்–செந்தாமரை மலரில் வசிக்கும் லக்ஷ்மி; வஞ்சம் இலார்க்கு–(மனத்தில்) கபடம் இல்லாதவர்களுக்கு; நீரும்–நீர் வளத்தையும்; நிழலும்–நிழலுள்ள சோலையும் அல்லது வீட்டையும்; நிலம் பொதியும்–நிலத்தின் விளைவால் நிறைந்துள்ள; நெற்கட்டும்–நெற்போரையும்; பேரும்–நல்ல பெயரையும்; புகழும்–கீர்த்தியையும்; பெரு வாழ்வும்–சிறப்பான உயர்ந்த வாழ்க்கையையும்; ஊரும்–நல்ல ஊரையும்; வரும் திருவும்–நாளும் வளர்ந்து வருகின்ற செல்வத்தையும்; வாழ்நாளும்–நெடிய ஆயுளையும்; என்றும்–எக்காலமும், தரும்–தந்தருள்வாள்.

*கருத்து* :—வஞ்சனை இல்லாதவர்க்குத் திருமகள் அருளினால் எல்லா நலங்களும் பெருகும்.

| எழு. | | பய. | செய. |
|---|---|---|---|
| தாமரையாள் | ... | தரும் | நீரும், நிழலும், நெற்கட்டும், பெரும்புகழும், பெருவாழ்வும், வரும் திருவும், வாழ்நாளும், |

## பாட்டு 7. ஆன முதலில் :—

**பதவுரை** :—ஆன—தனக்குண்டான; முதலில்-முதற் பொருளைக் காட்டிலும்; அதிகம் செலவானால்-மிகுதியாகச் செலவு செய்தால்; மானம் அழிந்து-பெருமை கெட்டு; மதி கெட்டு—அறிவு இழந்து; போன திசை—ஒடிப்போன திசைகளில்; எல்லார்க்கும் கள்ளனாய்—யாவர்க்கும் திருடனாகி; ஏழ் பிறப்பும்—ஏழுவகைப் பிறப்புக்களிலும் அல்லது ஏழு ஜன்மமட்டும்; தீயனாய்—பாவியாகி; நல்லார்க்கும்—நல்லவர்க்கும் அல்லது தன்னிடம் அன்புடைய பெண்டிர்க்கும்; பொல்லனாம்-பொல்லாதவனாவான்; நாடு—(இதனை நீ) ஆராய்ந்து கொள்வாயாக. ஏழ்பிறப்பும்—முற்றும்மை; நல்லார்க்கும்—உயர்வுச் சிறப்பு உம்மை.

கருத்து:—வரவுக் கதிகமாகச் செலவு செய்பவன் பல துன்பங்களை அடைவன். ஆதலால் வரவுக்குத் தக்க செலவே செய்யவேண்டும்.

| எழு. | | | பய. |
|---|---|---|---|
| (அதிகம் செலவு செய்பவன்) | ... | ... | பொல்லன் |
| (நீ) | ... | ... | நாடு |

## பாட்டு 8. உண்பது நாழி:—

**பதவுரை** :—உண்பது— (ஒரு நாளில் நாம்) உண்ணுவது; நாழி—அரைப்படி அரிசிச் சோறே; உடுப்பது—உடுக்கும் வஸ்திரம்; நான்கு முழம்—நான்கு முழ அளவாகும்; (ஆனால்) நினைந்து எண்ணுவன—நினைந்து எண்ணும் காரியங்களோ; எண்பது கோடி—எண்பது கோடியாகும்; (ஆதலால்) கண் புதைந்த—அறிவு கெட்ட; மாந்தர் குடிவாழ்க்கை—மனிதர்களின் குடித்தன வாழ்க்கை; மண்ணின் கலம் போல—மண் பானை போல; சாந்தனையும்—சாகும் அளவும்; சஞ்சலமே தான்-

துன்பமேயாகும். உண்பது உடுப்பது, தொழிற்பெயர் கள். நாழி—ஓர் அளவை; மண்ணின் சலம்-இன்ன சமயம் அழியும் என்ற நம்பிக்கை யில்லாததால் இன்னசமயம் உயிர் நீங்கி அழியும் என்ற நிலைபெறாத மானிட வாழ்க்கைக்கு உவமையாக்கப்பெற்றது. எண்பது கோடி—அளவின் மிகுதி யைக் காட்டியபடி. கண்-(இங்கு) ஞானக்கண்.

கருத்து :—கிடைத்தது போதுமென்று திருப்தி யடையாதவர் சாகும் அளவும் துன்பத்தால் வருந்துவர்.

| | எழு. | | பய. |
|---|---|---|---|
| 1 | உண்பது | ... | நாழி |
| 2 | உடுப்பது | ... | நான்கு முழம் |
| 3 | நினைந்து எண்ணுவன | ... | எண்பதுகோடி |
| 4 | மாந்தர் குடிவாழ்க்கை | ... | சஞ்சலம் |

## பாட்டு 9. ஆறிடு மேடும் :—

பதவுரை :—மாணிலத்தீர் – பெரிய பூமியில் வாழும் ஜனங் களே! ஆம் செல்வம்—உண்டாகும் செல்வம்; ஆறு இடும் மேடும் மடுவும்போல் - ஆற்றுவெள்ளத்தினால் உண்டாக்கப் படும் மேட்டையும் பள்ளத்தையும் போல; ஏறிடும் மாறிடும்- வளர்வதும் குறைவதும் ஆகும்; (ஆதலால்) சோறு இடும்- (இரப்பவர்களுக்கு உண்ண) சோறு போடுங்கள்; தண்ணீ ரும் வாரும்—குடிக்கத் தண்ணீரும் வாருங்கள்; தருமமே— இந்த உங்களது தருமமே; சார்பு ஆக—துணையாக; உள் நீர்மை-மனத்தின் சுத்தமான தன்மை; உயர்ந்து வீறும்-ஓங்கி விளங்கும். வெள்ளம் வந்தால் ஆற்றில் மேடாய் இருந்த இடம் பள்ளமாகவும் மடுவாய் இருந்த இடம் மேடாகவும் மாறிவிடுவதுபோல் உலகில் வறுமையும், செல்வமும் மாறி வரும்.

கருத்து:— செல்வம் நிலைபெற்றது அல்ல. ஆதலால் ஏழை களுக்கு அன்னமும் நீரும் அளியுங்கள்.

| | எழு. | | பய. |
|---|---|---|---|
| 1 | ஆம் செல்வம் | ... | மாறிடும், ஏறிடும் |
| 2 | மாணிலத்தீர் (நீர்) | ... | சோறிடும், தண்ணீரும் வாரும் |
| 3 | உண்ணீர்மை | ... | வீறும் |

பாட்டு 10. தேவர் குறளும்:—

**பதவுரை:**—தேவர் குறளும் – திருவள்ளுவ நாயனார் அருளி செய்த திருக்குறளும்; திருநால்மறைமுடிவும்-சிறந்த நான்கு வேதங்களின் முடிபொருளாகிய உபநிடதங்களும்; மூவர் தமிழும்-மூவர்பாடிய தேவாரமும்; முனிமொழியும்—வியாச முனிவர் அருளிச்செய்த வேதாந்த சூத்திரமும்; கோவை திருவாசகமும்- திருக்கோவையாரும், திருவாசகமும், திருமூலர் சொல்லும்-திருமூலநாயனார் அருளிய திருமந்திரம் என்னும் நூலும்; ஒரு வாசகம் என்று - ஒரே பொருளைக் குறித்த வாக்கியங்களென்று; உணர்-நீ அறிவாயாக.

தேவர் என்பது திருவள்ளுவருக்கு ஒரு பெயர்.

நான்மறையாவன:— ரிக், யஜுர், ஸாமம், அதர்வணம்.

மூவர்—அப்பர், சம்பந்தர், சுந்தரர்.

திருக்கோவையார்– திருவாசகம் இரண்டும் மாணிக்கவாசகர் அருளிச்செய்த நூல்கள்.

வேதம் ஒருவரால் செய்யப்படாததால் ஆசிரியர் பெயர் குறிப்பிடவில்லை.

| எழு. | | பய. |
|---|---|---|
| குறள், மறைமுடிவு, மூவர் தமிழ், கோவை, திருவாசகம், திருமூலர் சொல் | ... | ஒரு வாசகம் |
| நீ | ... | உணர் |

## III. இனிது நாற்பது

[இது இன்னின்னவை இனிய விஷயங்களெனக் கூறும் நாற்பது செய்யுட்களால் ஆகிய ஒரு நீதிநூல். இந்நூலை இயற்றிய ஆசிரியர் பூதஞ் சேந்தனர் என்பவர். இது சங்க நூல்களில் கீழ்க்கணக்கு என்னும் வகையுள் அடங்கும்.]

பாட்டு 1. மான மழிந்தபின் :—

**பதவுரை:**—மானம் அழிந்த பின்-பெருமை கெட்ட பிறகு; வாழாமை-உயிருடன் வாழாதிருத்தல்; முன் இனிது-மிக

இனியதாகும்; தானம் அழியாமை-தான் இருக்கும் நிலைமை அல்லது இடம் கெடாதபடி; தான் அடங்கி வாழ்தல்-தான் அடங்கி வாழ்வது; இனிது-இனியதாகும்; ஊனம் ஒன்று இன்றி - குறை வொன்றும் இல்லாமல்; உயர்ந்த பொருளுடைமை - மிகுந்த செல்வம் உடையவராதல்; மானிடவர்க்கு எல்லாம் - மனிதர்களுக்கெல்லாம்; இனிது-இனிமை தருவதாகும்.

கருத்து:—மான மழியாமலும், தன் நிலைமை கெடாமலும்; குறைவில்லாமற் செல்வமுடையவராய் இருத்தலும், மனிதருக்கு இனியனவாம்.

| எழு. | பய. |
|---|---|
| 1 வாழாமை | முன்னினிது |
| 2 அடங்கிவாழ்தல் | இனிது |
| 3 பொருளுடைமை | இனிது |

## பாட்டு 2. குழவி தளர் நடை:—

பதவுரை :—குழவி - குழந்தைகளுடைய; தளர்நடை - தளர்ந்த நடையை; காண்டல் - காணுதல்; இனிது - (பெற்றோர்க்கு)இனிமை தரத்தக்கதாம்; அவர்மழலை-அக்குழந்தைகளது மழலைச்சொற்களை; கேட்டல்-கேட்பது; அமிழ்தின் -தேவாமிருதத்தைவிட; இனிது-இனியது; வினையுடையான்-ஒருவினை செய்பவன்; வந்தடைந்து-துன்பம் தன்பால் வந்து சேர்ந்து; வெய்துறும் போழ்தும்; கஷ்டப்படும் காலத்தும், மனன் அஞ்சான் ஆகல்—மனம் அஞ்சாதவனாக ஆவது; இனிது-நன்மை தரத்தக்கதாம்.

கருத்து:—குழந்தைகளுடைய தளர்நடையும், மழலைச்சொற்களும் பெற்றோர்க்கு இனியன. ஒரு காரியத்தை மேற்கொண்டவன் இடையே உண்டாகும் கஷ்டங்களுக்கு அஞ்சாதிருத்தல் இனியது ஆகும்.

| எழு. | | பய. | | செய. |
|---|---|---|---|---|
| 1 காண்டல் | ... | இனிது | ... | தளர்நடை |
| 2 கேட்டல் | ... | இனிது | ... | மழலை |
| 3 ஆதல் | ... | இனிது | ... | .. |

பாட்டு 3. கற்றார் முன் கல்வி:—

**பதவுரை:**—கற்றார் முன் – கற்றவர்களின் முன்னே; **கல்வி உரைத்தல்** - தான் கற்ற கல்வியைச் சொல்லுதல்; **மிக இனிது**-மிக இனியதாகும்; **மிக்காரை**- (அறிவினால்) சிறந்தோரை; **சேர்தல்**-இனேகமாகக்கொண்டு சேர்தல்; **மிக மாண**-மிகச் சிறப்புப்பட; **முன் இனிது**-மிக இனியதாகும்; **எள்துணை ஆனும்**-எள்ளளவு ஆயினும்; **இரவாது**-பிறரிடம் போய் யாசிக்காமல்; **தான் ஈதல்**-தான் பிறர்க்குக் கொடுத்தல்; **ஆற்ற இனிது**-மிக இனியது.

**கருத்து:**—கற்றார் முன் தன் கல்வியை உரைத்தலும்; மிக்க அறிவுரையாரைச் சேர்வதும்; எள்ளளவேனும் யாசியாமல் தான் பிறர்க்கு ஈவதும் சிறந்தனவாம்.

| எழு. | பய. |
|---|---|
| 1 உரைத்தல் | இனிது |
| 2 சேர்தல் | இனிது |
| 3 ஈதல் | இனிது |

பாட்டு 4. பிறன் கைப் பொருள்:—

**பதவுரை:**— **பிறன் கை பொருள்**-பிறர் இடத்திலுள்ள பொருளை; **வெளவான்**-அபகரிக்காதவனுய்; **வாழ்தல் இனிது**-வாழ்வது இனியது. **அறம் புரிந்து**-தருமத்தைச் செய்து; **அல்லவை நீக்கல்**-பாவங்களைச்செய்யாது நீக்கிவிடுதல்; **இனிது**-இனியதாம். **மறந்தேயும்**-மறந்துபோயும்; **மாணு**-பெருமையில்லாத; **மபரிகள்**-அறிவில்லாதமூடரை; **சேரா திறம் தெரிந்து**-சேராத வழிகளை ஆராய்ந்து அறிந்து; **வாழ்தல் இனிது**-வாழ்வது இனியது.

**கருத்து:**—பிறர் பொருளை அபகரிக்காமலும்; அறம் செய்து பாவத்தை விலக்குவதும்; மூடர்களுடன் சேராதிருக்கும் வழிகளை அறிந்து கொள்வதும் இனியவைகளாம்.

| எழு. | | பய. |
|---|---|---|
| பொருள் வெளவான் வாழ்தல் | ... | இனிது |
| அல்லவை நீக்கல் | ... | இனிது |
| திறம் தெரிந்து வாழ்தல் | ... | இனிது |

## பாட்டு 5. வருவாய் அறிந்து:—

பதவுரை:— வருவாய்-தமக்குப் பொருள் வரும் அளவை; அறிந்து-தெரிந்துகொண்டு, வழங்கல் இனிது-(அதற்குத்தக்கவாறு) கொடுத்தல் இனியதாகும்; ஒருவர் பாங்கு ஆகாத-ஒருவர் பக்ஷமாகச்சேராத (ஊக்கம்-மனத்தில் ஊக்கமுடையதாய் இருத்தல்; இனிது -இனியது; பெருவகைத்து ஆயினும்-பெரிய பயனைத்தரக்கூடியதாயினும்; பெட்டவை-தாம் விரும்பியவற்றை; செய்யார் - ஆராய்ந்து செய்யாதவராய்; திரிபின்றி-வேறுபாடு இன்றி; வாழ்தல்-வாழ்வது; இனிது-இனியதாகும்.

கருத்து:— தனது பொருளின் வருவாய் அறிந்து கொடுப்பதும்; பக்ஷபாதமில்லாத உணர்ச்சியும்; தான் விரும்பியவற்றை ஆராய்ந்து செய்தலும் தனநிலைமையில் மாறுபாடின்றி வாழ்வதும் இனியனவாம்.

| எழு. | | பய. |
| --- | --- | --- |
| வழங்கல் | ... | இனிது |
| ஊக்கம் | ... | இனிது |
| வாழ்தல் | ... | இனிது |

பயன் மிகுதியாகக் கிடைப்பதாயினும், தன் நிலைமைக்கு மாறான காரியத்தைச் செய்யக்கூடாது.

## பாட்டு 6. தானங் கோடுப்பான்:—

பதவுரை:—தானம் கொடுப்பான். (தன்னிடம் அபயமென்று வந்தடைந்தவனுக்கு) இடமளித்து ஆதரிப்பவனுடைய தகைஆண்மை- பெருமை பொருந்திய வீரம்; முன் இனிது-மிக இனியது; மானம்- பெருமை; படவரின் - அழிவதாக ஏற்படுமேல்; வாழாமை-உயிர்வைத்துக்கொண்டு உலகில் வாழாதிருப்பது; முன் இனிது- மிக இனியதாம். ஊனம் கொண்டாடார் - குற்றம் பாராட்டாதவராய்; உறுதிஉடையவை—நன்மை யுடைய காரியங்களை; கோள்முறையால்-கொள்ளும் முறைப்படி; கோடல் - கொள்ளுதல்; இனிது-இனிமை யுடையது. தானம் கொடுப்பான்- அபயமளித்து ஆதரிப்பவன்; கோண்முறை- ஆசிரியர் பால் மாணக்கர் அடைந்து உறுதிப் பொருளைக் கேட்டுத் தெரிந்து கொள்ளும் முறைமை.

கருத்து:—அபயமளிக்கும் பெருமையும்; மானம் அழிவதானால் உயிர்வாழாத தன்மையும்; கெட்டதைநீக்கி நல்விஷயங்களைத் தக்கவர் இடத்தில் கேட்டுத் தெரிந்துகொள்வதும் இனியவையாம்.

| எழு. | பய. |
|---|---|
| ஆண்மை | இனிது. |
| வாழாமை | இனிது. |
| கோடல் | இனிது. |

செயப்படுபொருள் உறுதியுடையவை.

குறிப்பு:—கீழ்வரும் மற்ற செய்யுட்களுக்கும் மேற்கண்டவாறு எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களை அறிந்து கொள்க.

## பாட்டு 7. கயவரைக் கைகழிந்து:—

பதவுரை:—கயவரை- கீழ்மக்களை; கைகழிந்து- கைவிட்டு நீங்கி; வாழ்தல் - வாழ்வது; இனிது-இனியது; உயர்வு உள்ளி- தான் மேன்மேல் உயர்தலை நினைத்து; ஊக்கம் பிறத்தல்- மனவூக்கம் உண்டாகுதல்; இனிது நல்லது; எளியர் இவர் என்று-இவர் வறியவரென்று; இகழ்ந்து உரையார் ஆகி- அவமதித்து நிந்திக்காதவராகி; ஒளிபட வாழ்தல்-புகழ் உண்டாகும்படி வாழ்வது; இனிது-இனியதாகும்.

கருத்து:—அற்பரை நீங்கி வாழ்வதும்; நற்காரியத்தில் ஊக்கம் உண்டாதலும்; எளியவரென்று ஒருவரை இகழாது இருத்தலும்; புகழ் உண்டாக வாழ்தலும் இனியவைகளாம்.

## பாட்டு 8. நன்றிபயன் றூக்கி:—

பதவுரை:—நன்றி- (ஒருவன் செய்த) நன்றியின்; பயன் தூக்கி- பயனை ஆராய்ந்து; வாழ்தல் - வாழ்வது; இனிது - இனியதாம்; மன்றம் கொடும்பாடு உரையாத-நியாயசபையில் ஓரம் சொல்லாத; மாண்பு இனிது-பெருமை இனியது; அன்று அறிவார் யார் என்று- தன்னிடம் வைத்த அன்று அறிவார் ஒருவரும் இல்லையென்று; அடைக்கலம் வெளவாத-அடைக்கலப் பொருளை அபகரியாத; நன்றியில்-நல்ல செய்கையை விட; நனி இனிது இல்-மிகச் சிறந்தது வேறு இல்லை.

கருத்து:—ஒருவன்செய்த உபகாரத்தை நினைப்பதும்; நியாய ஸபையில் பக்ஷபாதம் உரையாதிருத்தலும்; ஒருவன் தன்னிடம் அடைக்கலமாக வைத்தபொருளை அபகரியாது இருத்தலும் சிறந்த செய்கைகளாம்.

## பாட்டு 9. அடைந்தார் துயர்கூரா:—

பதவுரை:—அடைந்தார் - தம்மிடம் அடைக்கலம் புகுந்தவர்; துயர்கூரா - துன்பம் மிக அடையாது; ஆற்றல்-அவரைக் காப்பாற்றுவது; இனிது - இனியது; கடன் கொண்டும்; கடன் வாங்கியாவது; செய்வன-செய்யத்தக்கவற்றை; செய்தல்-செய்வது; இனிது - இனியதாகும்; சிறந்து அமைந்த-மேலாகப் பொருந்திய; கேள்வியர் ஆயினும்-சாஸ்திரங்களைக் கேட்டறிந்தவர் ஆயினும்; ஆராய்ந்து அறிந்து-ஆலோசித்துப் பார்த்துத் தெரிந்து; உரைத்தல்-சொல்வது; ஆற்ற இனிது-மிக நல்லது.

கடன் கொண்டும் - என்பதால் கடன் வாங்குவதைப் பொதுவாகத் தவிர்க்கவேண்டும் என்பதைக் குறிப்பிடும். உம்மை இழிவுச் சிறப்பு.

கருத்து:—தம்மை யடைந்தோர்க்குத் துன்பம்வராமல் காப்பாற்றுவதும்; கடன்வாங்கியாவது செய்யவேண்டுவதைச் செய்வதும்; நூல்களைக் கற்றுத்தேர்ந்தாலும் ஆராய்ந்து சொல்லுதலும் இனியவைகளாம்.

## பாட்டு 10. எல்லிப் பொழுது:—

பதவுரை:—எல்லிப் பொழுது - இரவில்; வழங்காமை-வழிநடவாமை; முன் இனிது-மிக இனிது; சொல்லுங்கால்-ஒன்றைச் சொல்லுமிடத்து; சோர்வின்றி-மறதி இன்றி; சொல்லுதல்-சொல்வது; மாண்பு இனிது-மிக இனிது; புல்லிக் கொளினும்-(வலியவந்து) சேர்ந்துகொண்டாலும்; பொருளல்லார்- ஒருபொருளாக மதிக்கத்தகாத கீழோருடைய; கேண்மை - சினேகத்தை; கொள்ளாவிடுதல்-கொள்ளாது நீக்குதல்; இனிது-இனியதாம்.

சோர்வு இன்றி-குற்ற மின்றி என்றும் பொருள் கூறலாம்.

கருத்து:—இரவில் வழிநடவாதிருத்தலும்; ஒன்றை மறவாது அல்லது குற்றமில்லாது சொல்லுதலும்; கீழோர் நட்பு வலுவிலே வந்தாலும் ஏற்றுக் கொள்ளாது விடுதலும் நல்லதாம்.

## IV. இன்னா நாற்பது

[இது, இன்னின்னவை தீமை தரத்தக்கன வென்று கூறும் நாற்பது செய்யுட்களால் ஆகிய ஒரு நீதிநூல். இந்நூலை இயற்றியவர் **கபிலர்** என்னும் புலவர் பெருமான். இவர், மதுரைத்தமிழ்ச் சங்கத்துப் புலவர்களில் சிறந்தவர் ஆவர். இந்நூலும் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகும்.]

### பாட்டு 1. கொடுங்கோல் மறமன்னர்:—

**பதவுரை:**—கொடுங் கோல்- கொடுஞ் சோல் செலுத்தும்; மற மன்னர்- கொலைத் தொழிலையுடைய அரசர்; கீழ்- அவர் ஆட்சியின் கீழே; வாழ்தல்- வாழ்வது; இன்னா - துன்பமாகும்; நெடுநீர்-மிக்க நீரை; புணை இன்றி- தெப்பம் இல்லாமல் நீந்துதல்- நீந்திச்செல்லுதல்; இன்னா- துன்பம் தருவதாகும். கடுமொழியாளர்- கொடுஞ்சொல் கூறுவோருடைய; தொடர்பு- நட்பு; இன்னா- துன்பமாகும்; உயிர்க்கு- உயிர்களுக்கு: தடுமாறி வாழ்தல்-மனத்தடுமாற்றத்துடன்வாழ்வது; இன்னா- துன்பமாகும்.

கொடுங்கோல்- வளைந்தகோல், தடுமாற்றம்- தரித்திரம் நோய் முதலியவற்றால் உண்டாகும் சஞ்சலம்; உயிர்- இங்கு மக்கள் உயிரை கூறியது ஆகும்.

கருத்து:—கொடிய அரசர் ஆட்சியில் வாழ்வதும், தெப்பம் இன்றி நெடிய நீரில் நீந்திச்செல்வதும், கடுஞ்சொல் பேசுபவருடன் நட்புக் கொள்வதும், சஞ்சலத்தோடு உலகில் வாழ்வதும் தீமை தருவனவாம்.

### பாட்டு 2. எருதில் உழவர்க்கு:—

**பதவுரை:**—எருது இல் உழவர்க்கு- எருது இல்லாத உழவர்க்கு; போகு ஈரம் இன்னா-காய்ந்து போகின்ற ஈரம் துன்பம் தருவதாம்; கருவிகள் மாறி- ஆயுதங்களைக் கொண்டு எதிர்த்து யுத்தம் செய்யாமல் மாறுபட்டு; புறங்கொடுத்தல்-பகைவர்க்குப் பயந்து புறங்காட்டி ஓடுதல்; இன்னா- துன்பம் தருவதாம். திருவுடையாரை - செல்வம் உடையவரை; செறல்- பகைத்துக்கொள்ளுதல்; இன்னா- துன்பம் தருவதாம். பெருவலியார்க்கு - மிக்க வலிமை வாய்ந்தவர்க்கு; இன்னா செயல்- தீமை செய்வது; இன்னா-தனக்கே துன்பம் தருவதாகும்.

கருவிகண்மாறி – படையைவிட்டு நீங்கி என்றும் பொருள் கூறுவது உண்டு.

கருத்து:—எருதில்லாத உழவனுக்கு ஈரம் காய்ந்துபோவதும், போரில் புறங்காட்டி ஓடுதலும்; செல்வமுடையாரைப் பகைத்துக் கொள்வதும், வலிமையுடையவனுக்குக் கேடுசெய்வதும் துன்பம் தருவனவாம்.

## பாட்டு 3. ஆற்றல் இல்லாதான்:—

பதவுரை:—ஆற்றல் இல்லாதான்-சக்தி இல்லாதவன்; பிடித்த-கையிற் பிடித்துள்ள; படை இன்னா- ஆயுதம் துன்பம் தருவதாகும். நாற்றம் இல்லாத- மணம் இல்லாத; மலரின் அழகு இன்னா- பூவின் அழகு துன்பமாம்; தேற்றம் இலாதான்-தெளிவு இல்லாதவன்; துணிவு- ஒருகாரியத்தைச் செய்யத் துணிதல்; இன்னா-துன்பமாகும்; ஆங்கு-அவ்வாறே; மாற்றம் - சொல்லின் பொருளை; அறியான் உரை-அறியாதவனது வார்த்தை; இன்னா - துன்பம் தருவதாகும்.

மாற்றம்-பேசும் முறை அல்லது பதில் மொழி என்னலும் ஆம்.

கருத்து:—வல்லமை யில்லாதான் ஆயுதம் ஏந்துவதும், மணம் இல்லாத புஷ்பமும்; தெளிவில்லாதவன் ஒருகாரியத்தைத் துணிந்து செய்வதும்; பதில் சொல்லத் தெரியாதவன் பேசுவதும் துன்பம் தருவனவாம்.

## பாட்டு 4. பொருளுணர்வார் இல்வழி:—

பதவுரை:—பொருள் உணர்வார்- (பாட்டின்) பொருளை அறியும் அறிவாளிகள்; இல்வழி-இல்லாத இடத்தில்; பாட்டு உரைத்தல்- செய்யுளை இயற்றிக்கூறுதல்; இன்னா- துன்பம் தருவதாகும்; இருள்கூர்- இருள்மிகுந்த; சிறு நெறி- சிறிய வழியே; தாம் தனிப்போக்கு இன்னா-தாம் தனியாகப்போவது துன்பம் தருவதாம்; அருளிலார்- தங்கண்- இரக்கமில்லாதவரிடத்து; செலவு இன்னா – (யாசகத்திற்காக) செல்லுதல்; இன்னா- துன்பம் தருவதாகும்; பொருளில்லார்- செல்வம் இல்லாதவர்; வண்மைபுரிவு- பிறருக்கு ஈய விரும்புதல்; இன்னா- துன்பம் தருவதாகும்.

கருத்து:—பொருளறியாத மூடரிடத்துப் பாட்டுரைத்தலும்; இருள்மிகுந்த சிறுவழியே தனியாகச் செல்லுதலும்; இரக்கமற்றோர் இடத்தில் ஒன்றை விரும்பிச் செல்லுதலும்; செல்வமில்லாதவன் பிறருக்குக் கொடுக்க விரும்புவதும் துன்பம் தருவனவாம்.

பாட்டு 5. உண்ணாது வைக்கும்:—

பதவுரை:—உண்ணாது வைக்கும்-தான் சாப்பிடாமற் கூடத்தேடி வைக்கும்; பெரும்பொருள் வைப்பு- பெரிய பொருளின் வைப்பானது; இன்னா- துன்பம் தருவதாம்; நண்ணா- பொருந்தாத; பகைவர்- விரோதிகளுடைய; புணர்ச்சி- சிநேகம்; நனி இன்னா- மிகக்கெட்டதாகும். கண்ணில் ஒருவன்- விழியில்லாத குருடனது; வனப்பு இன்னா- அழகு துன்பமாம்; ஆங்கு- அவ்விதமே; எண்ணில்லான்- கணித நூல் அறியாதவன்; செய்யும் கணக்கு- செய்யும் கணக்குகள் இன்னா-துன்பம் தருவனவாம்.

கருத்து:—உண்ணாது தேடி வைக்கும் பொருளும், விரோதிகளுடைய சேர்க்கையும்; கண்ணில்லாதவன் அழகும், கணிதநூல் அறியாதவன் கணக்கும் துன்பம் தருவனவாம்.

பாட்டு 6. குலத்துப் பிறந்தவன்:—

பதவுரை:—குலத்துப் பிறந்தவன்- நற்குலத்தில் பிறந்தவன்; கல்லாமை- படிக்காது இருத்தல்; இன்னா-துன்பம்தருவதாம்; நிலத்திட்ட- பூமியில் விதைத்த; நல்வித்து-நல்ல விதைகள்; நாறாமை இன்னா- முளையாமற் போதல் துன்பமாகும். நலத்தகையார்- சிறந்த அழகுடைய பெண்கள்; நாணாமை- வெட்கமில்லாது நடத்தல்; இன்னா-துன்பம் தருவதாம்; ஆங்கு-அவ்வாறே; குலம் இல்வழி-நல்ல குலம் இல்லாத இடத்தில்; கலத்தல்-மணம் செய்து கொள்ளுதல்; இன்னா- துன்பமாம்.

கருத்து:—நற்குலத்திற் பிறந்தோன் படிக்காதிருப்பதும்; நிலத்திலிட்ட விதை முளையாதிருத்தலும்; பெண்கள் நாணமில்லாதிருப்பதும்; நற்குலம் அல்லாத இடத்தில் சம்பந்தம் செய்து கொள்வதும் துன்பம் தருவனவாம்.

பாட்டு 7. மாரிநாட் கூவும்:—

பதவுரை:—மாரிநாள்- மழைக்காலத்தில்; கூவும் - கூவுகின்ற குயிலின் குரல்-குயிலினுடைய ஓசை. இன்னா-துன்பமாம்

ஈரம் இலாளர்- இரக்கம் அன்பு இல்லாதவர்; கடுமொழி கூற்று- கடுமையான சொல்; இன்னா- துன்பமாம்; மாரி வளம் பொய்ப்பின்-மழை வளம் பொய்க்குமானால்; ஊர்க்கு- உலகிலுள்ள ஊர்களுக்கு; இன்னா—துன்பமாம். ஆங்கு—அவ் வாறே; மூரி—பெரிய; எருத்தால்—எருதினால்;உழவு இன்னா- உழுதல் துன்பம் தருவதாகும்.

வீரமிலாளர் – வீரத்தன்மை இல்லாதவர் என்றும் பொருள் கொள்வதுண்டு.

கருத்து:—மாரிக்காலத்துக் குயிலோசையும்; அன்பில்லாதார் கடுமொழியும்; மழையில்லாத ஊரும்; பெரிய எருதைப் பூட்டி உழுவதும் துன்பம் தருவனவாம்.

கட்டுக்கடங்காத பெரிய எருதால் உழுவது துன்பம் தருவதாகும்.

## பாட்டு 8. நட்டார் இடுக்கண்கள்:—

பதவுரை:—நட்டார்—சிநேகிதருடைய; இடுக்கண்கள் காண்டல்— துன்பங்களைப் பார்த்தல்; நனி இன்னா—மிகவும் துன்பமாம்; ஒட்டார் – பகைவரது; பெருமிதம் காண்டல் – கர்வத்தைப் பார்த்தல்; பெரிது இன்னா—மிகவும் துன்பமாம்; கட்டு இல்லா—பந்துக் கட்டில்லாத; மூதூர்—பழைய ஊரிலே;உறை இன்னா—வாழ்தல் துன்பமாம்; ஆங்கு—அவ்வாறே; நட்ட- விரும்பினால் கொள்ளப்பட்ட; கவற்றினால்—பாய்ச்சிகையால் ஆடுகின்ற; சூது—சூதாட்டம்; இன்னா—துன்பமாகும்.

கட்டு—கட்டுப்பாடும் ஆகும்;

கருத்து:—நண்பர்களது துன்பங்களைக் காண்பதும், பகைவர் கர்வித்து இருப்பதைக் காண்பதும், கட்டுக் காவல் இல்லாத ஊரில் வாழ்வதும், பாய்ச்சிகை கொண்டு சூதாடுவதும் துன்பம் தருவனவாம்.

## பாட்டு 9. பெருமை யுடையாரை:—

பதவுரை:—பெருமை உடையாரை—பெருந்தன்மை யுடையவரை பீடு அழித்தல்—பெருமை அழியக்கூறுதல்; இன்னா—துன் பம் தருவதாம்; கிழமை உடையார்—உரிமை யுடையவரை; களைந்திடுதல்—நீக்கிவிடுதல்; இன்னா—துன்பமாம்; வளமை இலாளர் – செல்வ மில்லாதவருடைய; வனப்பு—அழகு;

இன்னு—துன்பமாம்; இளமையுள்—இளமைப் பருவத்தில்; மூப்பு இன்னு—மூப்புக்குரிய துன்பங்களை அடைதல் துன்பம் தரும்.

கருத்து:—பெரியோரை இழிவுபடுத்திக் கூறலும்; ஒன்றுக் குரியவரை அதனின்றும் நீக்கிவிடுதலும்; செல்வமில்லாத வருடைய அழகும்; இளமையில் மூப்பு அடைதலும் துன்பம் தருவனவாம்.

## பாட்டு 10. பொருளில்லான் வேளாண்மை:—

பதவுரை:—பொருள் இல்லான்—செல்வமில்லாதவன்; வேளாண்மை காமுறுதல்— (பிறர்க்கு) உதவிபுரிதலை விரும்புதல்; இன்னு—துன்பம் தருவதாகும்; நெடு மாடம்—நெடிய மாளிகைகளை யுடைய; நீள் நகர்—பெரிய நகரத்திலே; கைத்து இன்மை—பொருள் இல்லாமல் இருத்தல்; இன்னு—துன்பம் தருவதாகும்; அடுமனை— (வேறுவேலை யின்றி) சமயல் அறையை; பார்த்திருந்துப்—பார்த்துக்கொண்டிருந்து; உண்ணல் இன்னு—உண்டு வாழ்தல் துன்பம் தருவதாம்; கெடுமிடம்—ஆபத்து வந்த இடத்தில்; கைவிடுவார்—விட்டு நீங்குவார; நட்பு இன்னு—சினேகம் துன்பம் தருவதாகும்.

கருத்து:—செல்வமில்லாதான் உதவிபுரிதலை விரும்புவதும்; பெரிய நகரில் செல்வமில்லாமல் வாழ்வதும்; வேறு தொழிலின்றிச் சமயல் அறையைக் காத்திருந்து உண்பதும்; ஆபத்து வேளையில் விட்டு நீங்குவார் சினேகமும் துன்பம் தருவனவாம்.

---

# V. சிலதனிச் செய்யுட்கள்

[இவை ஔவையாரால் அவ்வப்போது பாடப்பெற்றன என்பர்.]

## பாட்டு 1. சித்திரமும் கைப்பழக்கம்:—

பதவுரை:—சித்திரமும்—சித்திரம் எழுதுவதும்; கைப்பழக்கம்—கையின் பழக்கத்தினுல் தேர்ச்சிபெறும்; செந்தமிழும்—தமிழ் மொழியைப் பேசுவதும் அல்லது படிப்பதும்; நா பழக்கம்—நாவின் பழக்கத்தால் பேசி அல்லது படிப்பதால் வளரும்; வைத்ததொரு—பெரியோர்களால் சேர்த்துவைக்கப் பெற்றதான ஒரு; கல்வி—அறிவைத்தரும் நூல்களைக்கற்பது; மனம்

பழக்கம்-மனத்தில் அடிக்கடி சிந்திப்பதால் உண்டாகும்; சித்தம்-தினம்; நடையும்-நடப்பதும்; நடைப்பழக்கம்-நடக்கும் பழக்கத்தால் உண்டாகும்; (ஆனால்) நட்பு, தயை, கொடை-சினேகம், இரக்கம், கொடுப்பது ஆகியவை; பிறவிக்குணம்- (ஒருவனுக்கு) பிறவியிலேயே ஏற்படும் நற்குணங்களாம்.

கருத்து:—சித்திரம், தமிழ், கல்வி, நடை இவை பழக்கத்தால் உண்டாகும். ஆனால் நட்பு, தயை, கொடை இவை பிறவியிலே உண்டாவனவாம்.

## பாட்டு 2. காணாமல் வேணதேலாம்:—

பதவுரை:—கிளி - கிளி பானது; நாணாமல் - வெட்கப்படாமல்; பேச்சு பேச்சு என்னும்-சொல்லிக் கொடுத்த பேச்சுக்களைச் சொல்லும். (ஆனால்) பெரும் பூனை வந்தக்கால்-பெரியபூனை அங்குவரக் கண்டுவிட்டால்; கீச்சு கீச்சு என்னும் - (முன் சொன்ன பேச்சுக்களைவிட்டு) கீச்சு கீச்சு என்று வீரிட்டுக் கத்தும். (அதுபோல) காணாமல்-கற்றோரைக் காணாத இடத்தில்; வேணதெலாம்-பலவிஷயங்களை; கத்தலாம்-பொருளின்றி வாய்விட்டு உரக்கச் சொல்லலாம்; (ஆனால் அவர்) கற்றோர்முன்-படித்த பெரியோர்முன்னே; கோணாமல்-(நேரே) நன்றாக; வாய்திறக்க-வாயைத் திறந்து பேசுவதென்பது; கூடாது-முடியாது. ஏ-அசை.

கருத்து:—படிக்காதவர் கற்றோரைக் கண்டால் துணிந்து பேசமாட்டார்.

## பாட்டு 3. ஐயமிடுமின்:—

பதவுரை:—ஐயம்-பிச்சை; இடுமின்-கொடுங்கள்; அறநெறியை-தருமமார்க்கத்தை; கைப்பிடிமின்-உறுதியாகப் பற்றிக்கொள்ளுங்கள்; இவ்வளவேனும் - கொஞ்சமேனும்; அன்னம்-சோறு; இட்டு உண்மின்- யாசகருக்குக் கொடுத்துப் பின் நீங்கள் அருந்துங்கள்; (இவ்வாறு செய்த பின்) தெய்வம் ஒருவனே-கடவுள் ஒருவரே; என்றும்-என்ற உண்மையையும்; உணர வல்லீரேல்-அறிய வல்லவர்கள் ஆவீரேல்; அருவினைகள்-கொடிய பாவங்கள்; ஐந்தும்-காமம், பகை, விருப்பு; கருவம், பொறாமை; என்னும் ஐந்தும், அறும்-உம்மை விட்டுப் போம்.

கருத்து:—இரப்போர்க்குப் பிச்சை யிட்டும், தருமத்தைக் கைப் பிடித்தும், பிறர்க்குக் கொடுத்துத் தானும் உண்டும், தெய்வம் ஒன்றே என்ற எண்ணத்தையும் உடையவரானல் அவர்களது பாவங்கள் நீங்கும்.

பாட்டு 4. ஈதலறம்:—

பதவுரை:—ஈதல்—(எளியோர்க்குக்) கொடுத்தல்; அறம்—தருமம்; தீவினைவிட்டு—பாவ காரியங்களை விட்டு; ஈட்டல்—சம்பாதித்தலே; பொருள்—பொருள் தேடுவதாகும்; என்றும்—எப்பொழுதும்; காதல் — அன்புடைய; இருவர் — கணவன் மனைவி ஆகிய இருவர்; கருத்து—எண்ணம்; ஒருமித்து—ஒன்றுபட்டு; ஆதரவு பட்டதே—ஒருவருக் கொருவர் உதவியாக இருப்பதே; இன்பம்—இன்பமாகும்; பரனை நினைந்து கடவுளை நினைந்து; இம்மூன்றும் — மேற்கூறிய அறம், பொருள், இன்பம் என்ற மூன்றும்; விட்டதே — விட்டு நீங்கிய நிலைமையே; பேரின்ப வீடு—பெரிய இன்பத்தைத் தரும் மோக்ஷமாகும். இதில் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு, பேறுகளை அடையும் வழி கூறப்பட்டது காண்க.

கருத்து:—ஈதலே தருமம்; கெட்டவழியை விட்டு நன்மார்க்கத்தால் தேடுவதே பொருள்; கணவனும் மனைவியும் ஒருமித்து வாழ்வதே இன்பம்; இந்த அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் நாடாமல் கடவுளை நினைந்திருப்பதே மோக்ஷமாகும்.

பாட்டு 5. கற்றதுகைம் மண்ணளவு:—

பதவுரை:—கற்றது—கற்றுக் கொண்டது; கைமண்ணளவு—கையில் அடங்கிய ஒருபிடி மண்ணின் அளவாகும்; கல்லாது படிக்காதது; உலகு அளவு என்று—இவ்வுலகம் எவ்வளவு பெரிதோ அவ்வளவு என்று; உற்ற—கல்விக்கே தெய்வமாக வுள்ள; அல்லது கல்வியை யுடைய; கலைமடந்தை—சரஸ்வதி தேவி; ஓதுகின்றாள் — சொல்லுகின்றாள்; புலவீர் — புலவர்களே; மெத்த—மிகவும்; வெறும் பந்தயம்—வெறும் பந்தயங்கள் வைத்து; கூறவேண்டாம்—வழக்குப் பேசாதீர்கள்; எறும்பும் அற்பப்பிராணியாகிய எறும்பும்; தன்கையால்—தனது கையினால்; எண்சாண்— (மனிதனைப்போல) எட்டுச்சாண் நீள முள்ளது.

கருத்து:—தாம அதிகம் கற்ரும் என்று வீண்வாதம் புரியவது கூடாது.

பாட்டு 6. வாதக்கோன் நாளையென்ருன்:—

பதவுரை:—வாதக்கோன்–வாதக்கோன் என்பவன்; நாளையென்ருன்–நாளைத் தருகிறேன் என்ருன்; வையக்கோன்–வையக்கோன் என்பவன்; பின்னை யென்ருன்–பிறகு தருகிறேன் என்ருன்; ஏதக்கோன்–ஏதக்கோன் என்பவன்; யாதேனும் இல்லை என்ருன்–ஒன்றுமே கிடையாது என்ருன்; (இவற்றுள்) வாதக்கோன் சொல்லதினும்–வாதக்கோன் சொல்லிலும்; வையக்கோன் சொல்லதினும்–வையக்கோன் சொல்லிலும்; ஏதக்கோன் சொல்லே–ஏதக்கோன் (இல்லையென்று சொன்ன) சொல்லே; இனிது–இனியதாகும்.

கருத்து:—இரப்போர்க்கு வீண்ஆசை வார்த்தைகள் சொல்லுவதிலும் இல்லையென்று சொல்லிவிடுவதே நல்லது.

பாட்டு 7. சோல்லாமலே:—

பதவுரை:—நல்ல–அழகிய; குலா–ஒளிவீசுகின்ற; மாலை–மாலையணிந்த; வேல்கண்ணுய்–வேல்போன்ற கண்ணையுடைய பெண்ணே! பெரியார்–பெரியோர்கள்; சொல்லாமலே–செய்வதாகச் சொல்லாமலே; (செய்வர்) பிறர்க்கு வலுவில் வந்து உதவிசெய்வர்; சிறியர்–அறிவிற் சிறியவர்கள்–சொல்லி–தாம் செய்யும் உதவியைப் பிறர்க்குத் தெரியச் சொல்லி; செய்வர்–பிறகு உதவுவர்; கயவர் – கீழ்மக்கள்; சொல்லியும் – உதவி செய்வதாக ஆடம்பரமாய் எல்லோரும் அறியச் சொல்லியும்; செய்யார்–பின் உதவிசெய்யாமல் நின்றுவிடுவர்; கூறு உவமை–இதற்குச் சொல்லத்தகுந்த உபமானம்; நாடில்–ஆராய்ந்து பார்த்தால், பலா, மாவை, பாதிரியை–பலாமரத்தையும், மாமரத்தையும், பாதிரிமரத்தையும் பார் – பார்த்துத் தெரிந்துகொள். பலாமரம் வெளிப்பட யாரும் அறியப் பூக்காமலே காய்க்கும்; மாமரம் பூத்துக்காய்க்கும்; பாதிரி–பூத்தும் காய்ப்பதில்லை. பலாவைப் பெரியோர்க்கும்; மாவை–நடுத்தரமான சிறியோர்க்கும்; பாதிரியைக் கீழோருக்கும் உவமையாக்கப்பட்டது.

பாட்டு 8. மாடில்லான் வாழ்வு:—

பதவுரை:—மாடு இல்லான் வாழ்வு-உழவுக்கு மாடுஇல்லாதவனுடைய குடித்தன வாழ்க்கையும்; மதி இல்லான் வாணிபம்-புத்தியில்லாதவன் செய்யும் வர்த்தகமும்; நாடு இல்லான்-நாட்டை இழந்த அரசன்; செங்கோல் நடாத்துவதும்-செங்கோல் ஆட்சிபுரிவதும்; கூடும்-பொருந்திய; குரு இல்லான்-ஆசிரியரில்லாதவனுடைய; வித்தை- (தானேகற்ற) கல்வியும்; குணம்இல்லா பெண்டு-நற்குணம் இல்லாத மனைவியும்; விருந்து இல்லான்-விருந்தாளிகளை உபசரிப்பது இல்லாதவனுடைய; வீடும்-குடித்தன வாழ்க்கையும்; விழல்-விழலுக்குச் சமானமாகும்.

பாட்டு 9. எசியிடலின்:—

பதவுரை:—எசி-நிந்தித்து; இடலின்-(பின்) கொடுப்பதிலும்; இடாமையே - கொடுக்காததே; நன்று-நல்லது; எதிரில்-எதிர்நின்று; பேசும் - கோபத்துடன் மறுத்துப் பேசும்; மனையாளில்-மனைவியை அடைந்திருப்பதை விட; பேய் நன்று-பிசாசை மனைவியாக அடைவது நல்லது; நேசம் இலா-அன்பு இல்லாத; வங்கணத்தின் - சினேகத்தைவிட; வலியபகை-கொடிய பகைமையே; நன்று-நல்லது; வாழ்வு இலா- நல்லவாழ்வு இல்லாத; சங்கடத்தின்-சிரம வாழ்க்கையைவிட; சாதலே நன்று-இறந்து போவதே நல்லது.

பாட்டு 10. வேழமுடைத்து:—

பதவுரை:—மலைநாடு-மலைகளடர்ந்த சேரநாடு; வேழம் உடைத்து-யானைகளை மிகுதியாக உடையது; மேதக்க - மேன்மை பொருந்திய; சோழவளநாடு - செழுமையான சோழதேசம்; சோறு உடைத்து-உணவு மிகுதியாக உடையது; பூழியர் கோன்-பாண்டிய ராஜனுடைய; தென்நாடு-தெற்கேயுள்ள தேசம்; முத்து உடைத்து-முத்துக்களை விளைபொருளாக உடையது; தெள்நீர்-தெளிந்த நீர்வளமுடைய; வயல்-வயல்கள் சூழப்பெற்ற; தொண்டை நல்நாடு-தொண்டைமண்டலம் என்னும் நல்லநாடு; சான்றோர் உடைத்து-பெரியோர்களை உடையது.

இதில் தமிழ்நாடு நான்கின் சிறப்புக்கூறப் பெற்றுள்ளது.

அடியிற்கண்ட கேள்விகளுக்கு விடை கூறுக:—

1. விநாயகக் கடவுளை வணங்குவோர்க்கு உண்டாகும் நன்மைகள் யாவை?
2. 'பற்றலரைக் கண்டால் பணிவரோ'; யார்?- எதைப்போல?
3. 'குளத்தளவே யாகும் குணம்';- உவமை யாது?
4. அதிகச் செலவால் வரும் கேடுகள் யாவை?
5. செல்வத்தின் தன்மை யாது?
6. ஒரு வாசகம் என்று உணரவேண்டியவை யாவை?
7. மானிடவர்க்கு இனிது எது?
8. எதைக் கொள்ளாது விடுதல் இனிது?
9. வினைகள் ஐந்தும் யாவை?
10. பிறவிக் குணங்கள் யாவை?
11. அறம் பொருள் இன்பம் வீடு இவற்றை எவ்வாறு அடையலாம்?
12. எதக்கோன் சொல் இனிது என்றது ஏன்?
13. பலா, மா, [illegible]திரி இவை எவற்றிற்கு உவமை?
14. எவை விழலா[illegible]
15. மலைநாடு, சோழநாடு, தென்னாடு, தொண்டைநாடு இவற்றின் சிறப்புக்கள் யாவை?

அடியிற்கண்ட பதங்களுக்குப் பொருள் கூறுக:—

பற்றலர், ஆம்பல், கரவு, குறடு, மேதினி, இடும்பை, ஊனம், கேண்மை, வருவாய், மயரி, திரிபு, புணை, வெளவாத, செறல், வனப்பு, மூரி.

## காமாக்ஷி புக் டெப்போ பிரசுரங்கள் :—

*(Approved by the Text-Book Committee.)*

| | ரு. | அ. | பை. |
|---|---|---|---|
| புதுமுறைத் தமிழ் முதற் பாடம் Part I | 0 | 2 | 6 |
| " " முதற் பாடம் Part II | 0 | 1 | 6 |
| " " இரண்டாம் பாடம் ... | 0 | 3 | 0 |
| " " மூன்றாம் பாடம் ... | 0 | 4 | 0 |
| " " நான்காம் பாடம் ... | 0 | 5 | 0 |
| " " ஐந்தாம் பாடம் ... | 0 | 6 | 0 |
| " " ஆறாம் பாடம் ... | 0 | 7 | 0 |
| " " ஏழாம் பாடம் ... | 0 | 8 | 0 |
| " " எட்டாம் பாடம் ... | 0 | 9 | 0 |
| " " ஒன்பதாம் பாடம் ... | 0 | 10 | 0 |
| ஷை இளைஞர் இலக்கணம் Book I... | 0 | 3 | 0 |
| உத்தம நண்பர்கள் ... ... | 0 | 4 | 0 |
| உத்தம மாணவர்கள் ... ... | 0 | 4 | 0 |
| இளைஞர் கதாமஞ்சரி மலர் 1 இரு சகோதரர்கள் | 0 | 3 | 0 |
| ஷை மலர் 2 காந்ரேடு வாதாடிய கந்தன் | 0 | 3 | 0 |
| புதுமுறைத் தமிழ் 4, 5-ம் பாட உரை—தனித்தனி ... | 0 | 4 | 0 |
| புதுமுறைத் தமிழ் 6, 7, 8-ம் பாட உரை—தனித்தனி ... | 0 | 4 | 0 |

*For copies apply to:—*

**KAMAKSHI BOOK DEPOT,**

PUBLISHERS, BOOK-SELLERS, STATIONERS
& COMMISSION AGENTS

**New Street, Thiruvilandur, MAYAVARAM.**

காமாக்ஷி புக் டெப்போ,

புதுத் தெரு, திருவழுந்தூர், மாயவரம்.


Thompson & Co., Ltd., Printers, Madras.